மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION

# நன்னூல் எழுத்ததிகாரம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி – 627 012.

# இளங்கலை – தமிழ் - பாடத்திட்டம்

## முதலாமாண்டு

## முதற்பருவம்

## இலக்கணம் - நன்னூல் - எழுத்ததிகாரம்

## (பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் நீங்கலாக)

**அலகு 1** - எழுத்தியல், எண் – பெயர் - முறை – பிறப்பு – உருவம் - மாத்திரை – முதனிலை - இறுதிநிலை - இடைநிலையாக்கம் - போலி

**அலகு 2** - பதவியல், பகுபதம் - பகாபதம் - பகுதி - இடைநிலை – விகுதி – வடமொழியாக்கம்

**அலகு 3** - உயிரீற்றுப்புணரியல், பொதுப்புணர்ச்சி – உயிரீற்றுப் புணர்ச்சி – ஊகார ஏகார – ஐகார ஈற்றுச் சிறப்பு விதிகள்

**அலகு 4** - மெய்யீற்றுப் புணரியல், மெய்யீற்றின் முன் உயிர் - மெய் முன்உயிர் - ணகர, னகர ஈறு – மகர ஈறு- யகர, ரகர, ழகர,ஈறுகள் - லகர,ளகர ஈறு – வருமொழி ரகர, நகரத்திரிபு.

**அலகு5** - உருபுப்புணரியல் - எட்டு உருபுகள் சாரும் இடவகை – வேற்றுமை உருபுகள் - நிலைமொழி வருமொழியோடு உருபுகள் புணர்தல் - பொருள் சாரியைகள் - உருபுப்புணர்ச்சிக்குச் சிறபப்பு விதி.

**பாடநூல்**

நன்னூல் - எழுத்ததிகாரம் (கழகவெளியீடு)

# இலக்கணம்

## நன்னூல் - எழுத்ததிகாரம்

## (பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் நீங்கலாக)

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களில் நிலைத்து நிற்பது நன்னூல் ஆகும். இதனை எழுதிய ஆசிரியர் பவணந்தி முனிவர். காலம் 12ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி. சீயங்கன் என்னும் குறுநில மன்னன் வேண்டியதன் பேரில் இந்நூல் எழுதப்பட்டது. நன்னூல் தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு எழுதப்பட்ட வழிநூல் ஆகும். நன்னூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. எழுத்ததிகாரத்தில் மொத்தம் ஐந்து இயல்கள் உள்ளன.

1. எழுத்தியல்
2. பதவியல்
3. புணரியல்
4. மெய்யீற்றுப் புணரியல்
5. உருபுப் புணரியல்

சொல்லதிகாரத்தின் இயல்கள் (5)

1. பெயரியல்
2. வினையியல்
3. பொதுவியல்
4. இடையியல்
5. உரியியல்

நன்னூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சடகோபராமாநுசாரியர், சிவஞானமுனிவர், விசாகப் பெருமாள், ஆறுமுகநாவலர், பவனந்தம் முதலிய பலர் உரை எழுதியுள்ளனர்.

# அலகு – 1

## எழுத்தியல் (எழுத்தினது இலக்கணம் கூறும் அதிகாரம்)

**“கடவுள் வணக்கமும் அதிகாரமும்**

**பூமலி யசோகனின் புனைநிழ லமா்ந்**

**நூன்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே”** (1)

பூக்கள் நிறைந்த அசோக மரத்தினது அழகிய நிழலில் எழுந்தருளிய நான்கு திருமுகங்களுடைய கடவுளான அருகதேவனை வணங்கி எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்வேன் யான். நன்கியம்புவனென்று கூறுதல் நுதலிப்புகுதலென்னும் உத்தியாகும்.

### எழுத்திலக்கணத்தின் பகுப்பு (12)

**“எண்பெயா் முறைபிறப் புருவ மாத்திரை**

**முதலீ றிடைநிலை போலி யென்றா**

**பதம்புணா் பெனப்பன் னிருபாற் றதுவே.”** (2)

எழுத்தின் எண்ணும், பெயரும், முறையும், புறப்பும், வடிவமும், அளவும், மொழிக்கு முதலில் நிற்றலும், கடைநிலையில் நிற்றலும், இடைநிலையில் நிற்றலும், போலியும் என்றும் பதம், புணா்ச்சி என்று பன்னிரு பகுதியை உடையதாகும்.

### 1. எண்

### எழுத்து இன்னதென்பதும் அதன் வகையும்

**“மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி**

**எழுத்தது முதல்சாா் பெனவிரு வகைத்தே”** (3)

சொல்லுக்கு முதற்காரணமாகின்ற அணுக்கூட்டத்தின் காரியமாகிய ஓசை எழுத்தாகும். அது முதல் எழுத்து, சாா்பெழுத்து என இருவகைப்படும்.

**முதலெழுத்தின் விரி**

**"உயிரு முடம்புமா முப்பது முதலே"** (4)

உயிரெழுத்துப் பன்னிரண்டும், மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் முதலெழுத்தாகும்.

**சார்பெழுத்தின்வகை**

**"உயிர்மெய் யாய்த முயிரள பொற்ற**
**ப.்.கிய இஉ ஐஔ ம.்.கான்**
**தனிநிலை பத்துஞ் சாரியை"** (5)

உயிர்மெய்யும், ஆய்தமும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும், குற்றியலுகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமுமாகிய பத்தும் சார்பெழுத்து ஆகும்.

**சார்பெழுத்தின் விரி**

**"உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்த**
**எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை**
**ஆறே ழ.்.கு மிம்முப் பானேழ்**
**உகர மாறா றைகான் மூன்றே**
**ஔகா னொன்றே ம.்.கான் மூன்ஆறே**
**ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி**
**ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப"** (6)

உயிர்மெய் இருநூற்றுப்பதினாறும், முற்றாய்தம் எட்டும், உயிரளபெடை இருபத்தொன்றும், ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், குற்றியலிகரம் முப்பத்தேழும், குற்றியலுகரம் முப்பத்தாறும், ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக்குறுக்கம் ஒன்றும், மகரக்குறுக்கம் மூன்றும், ஆய்தக்குறுக்கம் இரண்டும் ஆக சார்பெழுத்து முந்நூற்றுபத்தொன்பது ஆகும்.

## 2. பெயர்

### பெயரின் பொதுவிலக்கணம்

**"இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின." (7)**

இடுகுறிப் பெயருங் காரணப் பெயருமாகிய இரண்டும் பல பொருள்களுக்குப் பொதுப்பெயராகியும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராகியும் வரும்.

எனவே இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர் எனப் பெயர் நான்குவகைப்படும்.

**எ.கா.**

**மரம் - இடுகுறிப் பொதுப்பெயர்**

**மா, பலா - இடுகுறிச் சிறப்புப்பெயர்**

**அணி - காரணச்சிறப்புப் பெயர்**

**முடி, கழல் - காரணச் சிறப்புப் பெயர்**

### எழுத்துக்களின் பெயர்

#### உயிரும் மெய்யும்

**"அம்முத லீரா றாவிகம்முதல்**

**மெய்ம்மூ வாறெள விளம்பினர் புலவர்" (8)**

அகரம் முதலிய பன்னிரண்டும், உயிரெழுத்து. ககரம் முதலிய பதினெட்டும் மெய்யெழுத்து என்று விளம்பினார் அறிவுடையோர்.

உயிர் (12) - அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

மெய் (18) - க், ங், ச், ஞ், ட், ண், த், ந், த், ப், ம், ய், ர், ல், வ், ழ், ற், ன்

**குறில்**

அவற்றுள்

**“அஇஉ எ ஒக்குறி லைந்தே”** **(9)**

உயிர்மெய் என்றவற்றுள் அ, இ, உ, எ, ஒ இவை ஐந்தும் குற்றெழுத்தாகும்.

**நெடில்**

**“ஆ ஈ ஊ ஐ ஓ ஔ நெடில்”** **(10)**

ஆ,ஈ, ஊ, ஏ, ஓ, ஔ எனும் ஏழும் நெட்டெழுத்தாகும்.

**சுட்டு**

**“அஇ உம்முதற் றனிவரிற் சுட்டே”** **(11)**

அ,இ,உ என்னும் மூன்றும் மொழிக்கு முதலில் தனித்து சுட்டுப்பொருளாகக் காட்டி வந்தால் சுட்டெழுத்தாகும்.

மொழிக்கு முதல் என சொல்லப்பட்டதால் மொழியின் அகத்தும், புறத்தும் வருமெனக் கொள்ள வேண்டும்.

அகச்சுட்டு - அவன், இவன், உவன்

புறச்சுட்டு - அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்.

**வினா**

**“எயா முதலும் ஆஓ வீற்றும்**

**ஏயிரு வழியும் வினாவாகும்மே”** **(12)**

எகரமும் யாவும் மொழிக்கு முதலிலும் ஆகாரமும், ஓகாரமும் மொழிக்கு இறுதியிலும் ஏகாரம் மொழிக்கு முதல் இறுதி ஆகிய இரண்டிடங்களிலும் தனித்து வினாப்பொருளைக் காட்டவரின் வினா எழுத்தாகும்.

**எ.கா**

| | | |
|---|---|---|
| எவன் | - | எ,யா முதலிலே அகத்து வந்தன |
| யாவன் | - | அகவினா |
| எக்கடவுள் | - | எ,யா முதலிலே புறத்து வந்தன |
| யாங்கனம் | - | புறவினா |
| பொன்னனா | - | ஆ,ஓ ஈற்றிலே புறத்து வந்தன |
| பொன்னோ | - | (ஈற்று வினா புறத்து மட்டுமே வரும்) |
| ஏவன் | - | ஏ முதலில் அகத்தும்,ஈற்றில் புறத்தும் |
| | | பொன்னனே வந்தது. |

**வல்லினம்**

**“வல்லினங் கசட தபறவென ஆறே”** (13)

க, ச, ட, த, ப, ற என்ற ஆறு எழுத்துக்களும் வன்கனமென பெயர்பெறும்.

**மெல்லினம்**

**“மெல்லினம் ஙஞண நமன வெனஆறே”** (14)

ங, ஞ, ண, ந, ன என்று ஆறு எழுத்துக்களும் மென்கணமென பெயர்பெறும்.

**இடையினம்**

**“இடையினம் யரல வழளவென ஆறே”** (15)

ய, ர, ல, வ, ழ, ள என்று ஆறு எழுத்துக்களும் இடைக்கணமென பெயர்பெறும்.

வன்மைக்கும் மென்மைக்கும் இடைநிற்றலாலும் வல்லெழுத்து தோன்றும் மார்புக்கும், மெல்லெழுத்துத் தோன்றும் மூக்குக்கும் இடையிலான கழுத்தில் பிறத்தலாலும் இடையினமாயிற்று.

**இனவெழுத்து**

**"ஐஔ இஉச் செறிய முதலெழுத்**

**திவ்விரண் டோரின மாய்வரன் முறையே"** (16)

இனமில்லாத ஐகார, ஔகாரங்கள் இகர உகரங்களைத் தமக்கு இனமாகப் பொருந்த முதலெழுத்துக்கள் இவ்விரண்டின் ஓரினமாய் வருதல் முறையாகும். இவை இனவெழுத்து எனப் பெயர் பெறும்.

**எ.கா**

அ - ஆ, இ - ஈ, உ - ஊ, எ - ஏ, ஐ - இ, ஒ - ஓ, ஔ - உ எனவும்,

க - ங, ச - ஞ, ட - ண, த - ந, ப - ம, ற - ன

**இனம் என்றதன் காரணம்**

**"தான முயற்சி யளவு பொருள்வடி**

**வுானவொன் றாதுயோர் புடையெளாப் பினேம"** (17)

பிறப்பிடமும், முயற்சியும், மாத்திரையும், பொருளும், உருவமும் ஆகிய இவற்றுள் ஒன்று முதலாகிய சில ஒத்திருத்தல் இனமாததற்குக் காரணமாம். தானத்தாலும் முயற்சியாலும் ஒத்து வருவன உயிரினமெல்லாம் முயற்சியாலும் அளவாலும் ஒத்துவருவன. இடையினம் ஒழிந்த மெய்கள் பொருளால் ஒத்துவருவன. அஆ, இஈ, உஊ, எஏ, ஒஓ, கங, சஞ, தந, பம, றன முதலியன.

அது,ஆது: இங்கு,ஈங்கு: உங்கு, ஊங்கு: எது, ஏது: ஒடு, ஓடு: குளக்கரை, குளங்கரை: தடஞ்சோலை, படம், பணம்: பாழ்த்தாறு, பாழ்ந்தாறு: அப்பு, அம்பு: நற்கு, நன்கு என சில பொருள் ஒத்துவருதல் குறிப்பிடத்தக்கது.

**3. முறை**

**"சிறப்பினு மினத்தினுஞ் செறுந்தீன் டம்முதல்**

**நடத்தல் தானே முறையாகும்மே"** (18)

சிறப்பினாலும், இனத்தினாலும் பொருந்தி இவ்வுலகத்தில் அகரம் முதலாக வழங்குவதே எழுத்துக்களது முறையாகும்.

### 4. பிறப்பு

**பிறப்பின் பொது இலக்கணம்**

**“நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப**
**எழுமனுத் திரளுரங் கண்ட முச்சி**
**மூக்குற் றிதழ்நாப் பல்லனத் தொழிலின்**
**வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே”** (19)

ஒலிக்கும் ஆற்றல் செவ்விதின் நிறைந்த உயிரினது முயற்சியால், உள்ளே நின்ற காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனாம் அணுக்கூட்டம், மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கு இடங்களையும் பொருந்தி உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியால் வேறு வேறு எழுத்து ஒலிகளாய்த் தோன்றுவது பிறப்பாகும்.

**முதலெழுத்துக்களின் பிறப்பிடம்**

அவ்வழி,

**“ஆவி யிடைமை யிடமிட றாகும்**
**மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை”** (20)

முன்சொன்ன வழியால் பிறக்குமிடத்து உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடங்கழுத்தாகும். மெல்லினம் மூக்கை இடமாகப் பொருந்தும். வல்லினம் மார்பை இடமாகப்பெறும்.

**முதலெழுத்துக்களுக்கு முயற்சிப்பிறப்பு**

அவற்றுள்,

**“முயற்சியுள் அஆ அங்காப் புடைய”** (21)

மேல்இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள் அ,ஆ இரண்டும் முயற்சியுள் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலை உடையனவாய் பிறக்கும். (அங்காத்தல் - வாயைத் திறத்தல்)

**"இஈ எஏஐ அங் காப்போ**

**டண்பன் முதனா விளிம்புற வருதே"** (22)

இ, ஈ, எ, ஏ, ஐ ஐந்தும் அங்காப்புடனே மேல்வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்தப்பிறக்கும்.

**"உ ஊ ஒஓஔ விதழ் குவிவே"** (23)

உ,ஊ,ஒ,ஓ,ஔ ஐந்தும் பிறப்பதற்குரிய முயற்சி உதடுகள் குவிதலாகும்.

**"கஙவுஞ் சஞவும் டணவும் முதலிடை**

**நுனிநா வண்ண முறமுறை வருமே"** (24)

ககரமும், ஙகரமும், சகரமும், ஞகரமும், டகரமும், ணகரமும் முறையே நாவின் கடையும் நடுவும் நுனியும் மேல்வாயின் அடியையும் நடுவையும் நுனியையும் பொருந்தப் பிறக்கும்.

**"அண்பல் அடிநா முடியுறத் தநவரும்"** (25)

மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்கு நுனி பொருந்த தகரமும், நகரமும் பிறக்கும்.

**"மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்"** (26)

மேலுதடுங் கீழுதடும் பொருந்த பகரமும் மகரமும் பிறக்கும்.

**"அடிநா வடியண முறயத் தோன்றும்"** (27)

நாக்கினடியானது மேல்வாயடிரயப் பொருந்த யகரமானது பிறக்கும்.

**"அண்ண நுனிநா வருட ரழவரும்"** (28)

மேல்வாயை நாக்கு நுனியானது தடவ ரகரமும் ழகரமும் பிறக்கும்.

**“அண்பல் முதலு மண்ணமு றையின்**

**விளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்**

**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்”** **(29)**

மேல்வாய்ப் பல்லின் அடியையும், மேல்வாயையும் முறையே நாவின் ஓரம் தடித்துப் பொருந்தவும், தடவவும், லகாரமாகியும் ளகாரமாகியும் இரண்டெழுத்துக்களும் தோன்றும்.

**“மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே”** **(30)**

மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்த வகரமானது பிறக்கும்.

**“அண்ண நுனிநா நனியுறறிற் றனவரும்”** **(31)**

மேல்வாயை நாக்கின் நுனி மிகப் பொருந்தின் றகரமும், னகரமும் பிறக்கும்.

**“ஆய்தக் கிடந்லை யங்கா முயற்சி**

**சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய”** **(32)**

ஆய்தவெழுத்துக்குப் பிறப்பிடம் தலையாம், முயற்சி வாயைத் திறந்த ஆய்தம் நீங்கலான மற்றைச் சார்பெழுத்துக்களும் இடமுயற்சி வகைகளினால் தம்தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம்.

**பிறப்புக்குப் புறனடை**

**“எடுத்தல் படுத்தல் னலித லுழப்பிற்**

**றிரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்”** **(33)**

பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டனவாயினும் உயர்த்தி உச்சரித்தாலும், தாழ்த்தி உச்சரித்தாலும், நடுத்தரமாக உச்சரித்தாலும் எழுத்திற்கு உரிய ஒலி முயற்சி வகையினால் ஒன்றற்கு ஒன்று பிறப்பு வேறுபாடுகளும் அவற்றுள் சிறிது சிறிது உளவாம்.

**உயிர்மெய்**

**“புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்**

**ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்**

**ஊயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்**

**பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்”** **(34)**

மெய் அகரவுயிரோடு கூடிய பொழுது, புள்ளியை விட்டு அவ்விட்ட வடிவே வடிவாகியும், ஆ முதலிய மற்றை உயிர்களோடு கூடியபொழுது புள்ளிவிடுதல் மாத்திரமேயன்றி வடிவு வேறுபட்டும், உயிர்மாத்திரையே மாத்திரையாய், வரிவடிவில் உயிரின் வடிவை ஒழித்து மெய்யெழுத்து விகரப்பட்ட வடிவே வடிவாய், உயிரும் மெய்யும் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடனே மெய்யினொலி முன்னும் உயிரிணொலி பின்னுமாகி உயிர்மெய் எழுத்து வரும்.

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யின் மேலும் தனித்தனி ஏறிவருதலால், உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு ஆகும்.

**முற்றாய்தம்**

**“குறியதன் முன்ன ராய்தப் புள்ளி**

**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே”** **(35)**

மூன்று புள்ளி வடிவாகிய ஆய்தவெழுத்தானது குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாகியே வரும்.

**எ.கா:**

எ.ஃகு, க.ஃசு, ஒன்ப.ஃது, ப.ஃறி.

**உயிரளபெடை**

**“இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்**

**அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே”** **(36)**

பாட்டில் ஓசை குறையின், மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்தேழும், அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிகுந்தொலிக்கும். அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அதனதற்கு இனமான குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும்.

**எ.கா:**

ஓஒதல் வேண்டு மொளிமாழ்ஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர்.

**ஒற்றளபெடை**

**“ஙஞண நமன வயலள வாய்தம்**
**அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை**
**மிகலே யவற்றின் குறியாம் வேறே”** **(37)**

குறிலிணையின் கீழும் குறிலின் கீழும், மொழிக்கு நடுவிலும் கடையிலம் நின்ற ங,ஞ,ண,ந,ம,ன,வ,ய,ல,ள, ஆய்தம் ஆகிய எழுத்துக்கள் ஓசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அவ்வெழுத்துக்களே வரிவடிவில் வேறறிகுறியாய் வரும்.

**எ.கா:**

இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்.

**குற்றியலிகரம்**

**“யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்**
**அசைச்சொன் மியாவி னிகரமுங் குறியே”** **(38)**

யகரத்தை முதலிலே யுடைய சொல் வர, குற்றியலுகரந் திரிந்த இகரமும், முன்னிலை அசைச் சொல்லாகிய மியா வென் பதின் மகரத்தின் மேலிருக்கிற இகரமும் குற்றியலிகரங்களாகும்.

**எ.கா:**

நாகு + யாது = நாகியாது

எ.்.கு + யாது = எ.்.கியாது

**குற்றியலுகரம்**

**"நெடிலோ டாய் முயிர்வலி மெலிடைத்**

**தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்**

**அ.்.கும் பிறமேற் றொடரவும் பெறுமே"** (39)

தன்நெடில் ஏழுடனே ஆய்தம் ஒன்றும் வல்லெழுத்தாறும் மெல்லெழுத்தாறும் இடையெழுத்தைந்தும் ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றினாலே ஈற்றுக்கு அயலெழுத்தாத் தொடரப்பட்டு சொல்லினிறுதியில் வல்லெழுத்துக்களுள் யாதாயினும் ஒன்றன் மேல் ஏறிவரும் உகரமானது தன் ஒரு மாத்திரை அளவில் குறுகும். இவற்றுள் நெடில் தொடர் நீங்கிய ஐந்து தொடரும் மேலே தொடரவும் பெறுமே.

**ஐகார ஔகாரக் குறுக்கம்**

**"தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்**

**நையு மௌவு முதலற் றாகும்"** (40)

ஐகாரம், தன்னைக் குறித்துத் தன் பெயர் சொல்லுமளவிற் குறுகாது ஒழிந்த சொல்லுக்கு முதலிடை கடைகளிலே எங்கு நிற்பினும் தன் மாத்திரையிற் குறுகும். சொல்லுக்கு முதலிலே தன் மாத்திரையிற் குறுகும்.

**எ.கா:**

ஐப்பசி, இடையன், குவளை.

**"ணன முன்னும் வ.்.கான் மிசைமக் குறுகும்"** (41)

ணகர னகர மெய்களில் ஒன்றன் முன்னும் வகர உயிர்மெய்யின் பின்னும் மகரமெய் தன் அரை மாத்திரையிற் குறைந்து வரும்.

**ஆய்தக்குறுக்கம்**

**“லளவீற் றியைபினா மாய்த ம.்.கும்” (42)**

லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியில் ஆகின்ற தன் அரை மாத்திரையிற் குறுகும்.

**5. உருவம்**

**“தொல்லை வடிவின வெல்லா வெழுத் மாண்**

**டெய்து மெகர வொகரமெய் புள்ளி” (43)**

எல்லா எழுத்துக்களும் பண்டு தொட்டே பலவேறு வகைப்பட்ட எழுதி வழங்கும் வடிவினை யுடையனவாகும். அவ்வடிவையுடையனவாய் வழங்குமிடத் எகரமும் ஒகரமும் மெய்களும், புள்ளியைப் பெறும்.

**எ.கா:**

எ், ஒ், எனவும் க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ்,

ள், ற், ன் எனவும் வரும்.

**6. மாத்திரை**

**எழுத்துக்களின் மாத்திரை**

**“மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே**

**குறிலோ டையௌக் குறுக்க மொற்றள**

**பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்**

**கால்குறண் ம.்.கா னாய்த மாத்திரை” (44)**

மாத்திரை உயிரளபெடைக்கு மூன்றாகும். நெட்டெழுத்திற்கு இரண்டாகும். குற்றெழுத்திற்கும், ஐகாரக்குறுக்கத்திற்கும், ஔகாரக்குறுக்கத்திற்கும், ஒற்றளபெடைக்கும், தனித்தனியே ஒன்றாகும். மெய்யெழுத்திற்கும், குற்றியலிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் தனித்தனியே அரையாகும். மகரக்குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் காலாகும்.

**மாத்திரை இன்னதென்பது**

**“இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை” (45)**

மனிதருடைய இயல்பாக உண்டாகுகின்ற, கண்ணிமைப் பொழுதுங் கைந்நொடிப் பொழுதும், ஒரு மாத்திரை என்னும் வரையறைப் பொழுதாம்.

**மாத்திரைக்குப் புறனடை**

**“ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்**

**மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்” (46)**

இசைத்தலும், அழைத்தலும், பண்டமாற்றும் முதலானவிடத்து உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் முன் குறிப்பிட்ட அளவைக் கடந்து அதிகமாக ஒலிக்கும்.

**7. முதனிலை**

**“பன்னீ ருயிருங் கசதந பமவய**

**ஞங வீரைந்துயிர் மெய்யு மொழிமுதல்” (47)**

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங ஈரைந்து உயிர்மெய்யும் சொல்லுக்கு முதலாகும்.

**எ.கா:**

அடை, ஆடை, இடை,ஈடு, உடை, ஊர், எடு, ஏடு, ஐயம், ஒன்று, ஓடம், ஔவை.

களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவணர், ஞமலி, அங்ஙனம்.

**வகரம் முதலாதல்**

**“உஊ ஒஓ வலவோடு வம்முதல்” (48)**

உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு மல்லாத எட்டு உயிர்களோடும் வகர மெய் முதலாகும்.

**எ.கா:**

வளை, வாழை, விடு, வீடு, வெல், வேல், வையம், வெளவால்.

**யகரம் முதலாதல்**

**"அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல் "** **(49)**

அ ஆ உ ஊ ஓ ஔ என்னும் ஆறு உயர்களோடும் யகர மெய் முதலாகும்.

**எ.கா:**

யவனர், யானை, யுகம், யூகம், யோசனை, யெளவனம்.

**ஞஅகரம் முதலாதல்**

**"அ. ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்"** **(50)**

அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரோடும் ஞகர மெய் முதலாகும்.

**எ.கா:**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

**ஙகரம் முதலாதல்**

**"சுட்டியா வெகர வினாவழி யவ்வை**

**ஒட்டி ஙவ்வு முதலாகும்மே"** **(51)**

மூன்று சுட்டும் யாவினாவும் எகர வினாவும் ஆகிய ஐந்தனுடைய பின்னே, அகரத்தைச் சேர்ந்து, ஙகரமெய் சொல்லுக்கு முதலாகும்.

**எ.கா:**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்கனம்.

**8. இறுதிநிலை**

**"மொழிக்கு கிறுதியில் வரும் எழுத்துக்கள்**

**ஆவி ஞணநமன யரலவ ழளமெய்**

**சாயு முகரநா லாறு மீறே"** **(52)**

தனித்தும் மெய்யோடு கூடியும் வரும் பன்னிரெண்டு உயிர்களும் ஞ முதல் ள ஈறான பதினொரு மெய்களும் குற்றியலுகரதுமாகிய இருபத்து நான்கெழுத்தும் மொழிக்கு ஈறாகும்.

**எ.கா:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ

ஆவி தனித்து ஈறாகியது.

விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, ை, நொ, போ, கௌ.

ஆவி மெய்யோடு கூடி ஈறாகியது.

**சிறப்பு விதி**

**"குற்றுயி ரளபி னீறா மெகர**

**மெய்யொடே லாதொந் நவ்வொ டாமௌக்**

**ககர வகரமோ டாகு மென்ப"** **(53)**

அ இ உ எ ஒ என்கிற உயிர்க்குற்றெழுத்க்கள் ஒரெழுத்தொருமொழியாய் ஈறாதலன்றி அளபெடையிலும் வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறாகும். எகரம் மெய்யோடு கூடி ஈறாகாது. ஒகரம் ஙகர மெய் யொற்றுடனே கூடி ஈறாகும். ஔகாரம் ககர வகர மெய்களிரண்டும் கூடி ஈறாகும்.

எ.கா : பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ, எனவும் நொ, கௌ, வௌ எனவும் வரும்.

**எழுத்தினது முதலும் ஈறும்**

**"நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே"** **(54)**

மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நின்ற வழியே உயிர் மெய்க்கு மெய் முதலாகும் உயிரீறாகும்.

## 9. இடைநிலை மயக்கம்

**"க ச த ப வொழித்த வீரேழன் கூட்டம்**

**மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்**

**டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை**

**மேவு முயிர்மெய் மயக்கள வின்றே"** **(55)**

க ச த ப என்னும் நான்கையும் நீக்கிய பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடுங் கூட்டம் வேற்றுநிலை மெய்மயக்கம் ஆகும். ர ழ என்னும் இரண்டையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களும் தம்மோடு கூடுங் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கம் ஆகும். இவ்விருவகை மயக்கமும் ஒரு மொழிக்குந் தொடர் மொழிக்கும் நடுவில் வரும். உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி மயங்கும் மயக்கத்திற்கு அளவு இன்று.

### வேற்று நிலை மெய்மயக்கத்திற்ச் சிறப்பு விதி

**"ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே"** **(56)**

ஙகர மெய்யின் முன் ககரம் மயங்கும்.∴. வகர மெய்யின் முன் யகரம் மயங்கும்.

**எ.கா:**

தங்கம், தெவ்வாது.

**"ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்"** **(57)**

ஞகர நகர மெய்களின் முன் அவற்றிற்கினமாகிய சகர தகரங்கள் யகரத்துடன் மயங்கும்.

**எ.கா:**

பஞ்சு, உரிஞ்யாது.

பந்து, பொருந்யாது.

**"டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்"** **(58)**

டகர றகர மெய்களின் முன் க,ச,ப என்று மூன்று மெய்களும் பொருந்தி மயங்கும்.

**எ.கா:**

உட்கு, கட்சி, திட்பம்.

கற்க, முயற்சி, கற்பு.

**"ணன முன் னினங்கச ஞபமய வவ்வரும்" (59)**

ணனர னகர மெய்களின் முன் அவற்றிற்கினமாகிய டகர றகரங்களும் க,ச,ஞ,ப,ம,ய,வ முதலிய ஏழு மெய்களும் மயங்கும்.

**எ.கா:**

வண்டு, எண்கு, வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது.

நன்று, புன்கு, புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது.

**"மம்முன் ப ய வ மயங்கு மென்ப" (60)**

மகர மெய்யின் முன் ப,ய,வ என்னும் மூன்று மெய்களும் மயங்கும் என்று கூறுவர் புலவர்இ

**எ.கா:**

கம்பன், கலம்யாது, கலம்வலிது.

**"யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்" (61)**

ய,ர,ழ என்னும் மூன்று மெய்களின் முன் மொழிக்கு முதலாக வரும் பத்து மெய்களும் மயங்கும்.

**எ.கா:**

வேய்கடிது, வேர் கடிது, வீழ்கடிது, சிறிது தீது, நீண்டது, பெரிது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது.

**“லளமுன் கசப வயவொன் றும்மே”** **(62)**

லகர ளகர மெய்களின் முன் ககரம் முதலிய இவ்வைந்தும் மயங்கும்.

**உடனிலை மெய்மயக்கத்தின் சிறப்பு விதி**

**“ரழவல்லன தம்முற் றாமுட னிலையும்”** **(63)**

ரகர ழகர மல்லாத மெய்கள் தமக்கு முன் தாம் உடனின்று மயங்கும்.

**எ.கா:**

அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞை, அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பன், அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை.

**தனிமெய்யுடன் தனி மெய்யாய் மயங்குவனவும் மொழிக்கு உறுப்பாக மயங்காதனவும்**

**“யரழவொற் றின்முன் கசதப ஙஞநம**

**ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா”** **(64)**

ய, ர, ழ என்னும் மூன்று மெய்களின் முன் ககர முதலிய இவ்வெட்டு மெய்களும் தனி மெய்யும் உயிர் மெய்யுமாகி மயங்குதலுடன் ஈரொற்றாயும் மயங்கும். ர, ழ த் தனிக் குறில் அணையா ரகார ழகார மெய்கள் தனிக் குறிற்கீழ் ஒற்றாக மயங்கமாட்டா.

**எ.கா:**

வேய்க்குறை, வேர்க்குறை வீழ்க்குழறை (க)

வேய்ச்சிறை, வேர்ச்சிறை, வீழ்ச்சிறை (ச)

வேய்த்தலை, வேர்த்தலை, வீழ்த்தலை (த)

வேய்ப்புறம், வேர்ப்புறம், வீழ்ப்புறம் (ப)

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு (ங)

தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை (ஞ)

காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம் (ந)

வேய்ம்புறம்,ஈர்ம்பணை, பாழ்ம்பதி (ம)

## செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துக்கள்

**"லளமெய் திரிந்த னணமுன் மகாரம்**

**தைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே" (65)**

லகார ளகார ஒற்றுத் திரிந்த னண முன் மகார ஒற்று முன் சொன்னபடியே ஈரொற்றுடனிலையாம் செய்யுட்கண்.

**எ.கா:**

'திசையறி மீகானும் போன்ம்'

## முதனிலை இறுதிநிலை இடைநிலைகளுக்குப் புறனடை

**"தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்**

**இம்முறை மாறியு மியலு மென்ப" (66)**

எழுத்துக்கள் தம்முடைய பெயர்களைச் சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்குமிடத்து மொழி முதலுக்கும் இடைநிலை மயக்கத்திற்கும் இப்படி விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லா எழுத்துக்களும் முதலாகியும் மயங்கியும் வரும்.

## 10. போலி

**"மொழியிறுதிப் போலி**

**மகர விறுதி ய.்.றிணைப் பெயரின்**

**னகரமோ டுறழா நடப்பன வுளவே" (67)**

பால்பகா அ.்.றிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகர மெய் னகர மெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு.

**எ.கா:**

அகம் - அகன் , நிலம் - நிலன்

நலம் - நலன் , வலம் - வலன்.

**மொழி முதற்போலியும் மொழியிடைப் போலியும்**

**"அஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்" (68)**

சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் சகர ஞகர யகரங்களுக்கு அகரமும ஐகாரமும் வேறுபாடின்றி ஒத்து நடக்கும்.

**எ.கா:**

பசல் - பைசல், மஞ்சு – மைஞ்சு, மயல் - மையல் (முதற்போலி)

அமச்சு – அமைச்ச, இலஞ்சி - இலைஞ்சி, அரயர் - அரையர்

(இடைப்போலி)

**மொழியிடைப்போலி**

**"ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி**

**ஞ.:.கா னுறழு மென்மரு முளரே" (69)**

சொல்லுக்கு நடுவே சில விடத்து ஐகாரத்தின் பின்னும் யகர மெய்யின் பின்னும் இயல்பாய் வரும் நகர மெய்யினோடு ஞகர மெய் ஒத்து நடக்கும் என்று சொல்வாருஞ் சிலருண்டு.:.

**சந்தியக்கரம்**

**"அம்மு னிகரம் யகர மென்றிவை**

**எய்தி னையொத் திசைக்கு மவ்வோ**

**டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன" (70)**

அகரத்தின் முன் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தம்முளொத்துப் பொருந்தினால் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும் அகரத்தோடு உகரமும் வகர மெய்யுந்

தம்முள்ளொத்து ஒரு தன்மையனவாகப் பொருந்தினால் ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

**எழுத்தின் சாரியைகள்**

**"மெய்க எகரமு நெட்டுயிர் காரமும்**

**ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்**

**விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற"** **(71)**

ஒற்றுக்கள் அகரச் சாரியையும் உயிர் நெடில்கள் காரச் சாரியையும் அவற்றுள் ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையுடனே கான் சாரியையும் உயிர்க்குறிலும் உயிர் மெய்க் குறிலும் ஆகின்ற சாரியைகளைப் பெறும்.

**எ.கா:**

க,ங

ஆகாரம், ஐகாரம், ஔகாரம்.

ஐகான், ஔகான்.

**இவ்வியலுக்குப் புறனடை**

**"மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே"** **(72)**

இவ்வெழுத்துக்கள் சொல்லாயினும் அச்சொல் தம்மோடும் உருபோடும் முன் சொல்லப்பட்ட அப்பத்திலக்கணத்தையும் உடையனவாகும்.

## வினாக்கள்

1. எழுத்து என்றால் என்ன? வகைகளை விளக்குக
2. அளபெடை என்றால் என்ன? வகைகளை விளக்குக.
3. போலி என்றால் என்ன? வகைகளை விளக்குக.
4. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை?
5. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் யாவை?
6. குறுக்கம் என்றால் என்ன? வகைகளை விளக்குக.

# அலகு – 2

# பதவியல்

எழுத்தின் புறத்திலக்கணம் இரண்டில் பதத்தின் இலக்கணத்தைச் சொல்லும் இயல். இவ்வியலுக்கு ஆதாரம் பெரும்பாலும் வடமொழியாதலால் பதவியல் எனப் பெயரிட்டார் நன்னூலார். இவ்வியலில் பதம் இன்னதென்பதும் அதன் வகையும், ஓரெழுத்தொருமொழி, தொடரெழுத்து மொழிகள், பகாப்பதம், பகுபதம், பகுபத உறுப்பு, பகுதி, விகுதி, இடைநிலை, வடமொழியாக்கம் ஆகியன விளக்கப்பட்டுள்ளது.

**பதம் இன்னதென்பதும் அதன் வகையும்**

**“எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்**
**பதமா மதுபகாப் பதம் பகுபதமென**
**இருபா லாகி யியலு மென்ப”** (1)

எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும், இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிற பொருளைத் தருமாயின் பதமாம். அப்பதம் பகுப்பதம், பகாப்பதம் என இரண்டு வகையுடையதாகி நடக்கும் என்று சொல்லுவர்.

**“உயிர்மவி லாறுந் தபநவி லைந்துங்**
**கவசவி னாலும் யவ்வி லொன்று**
**மாகு நெடினொது வாங்குறி லிரண்டோ**
**டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின”** (2)

உயிர் வகையிலும் மகர வகையிலும் அவ்வாறும் தகர பகர நகர வகைகளில் ஐவ்வைந்தும் ககரம் வகரம் சகர வகைகளில் நந்நான்கும் யகர வகையில் ஒன்றும் ஆகும் நெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், நொ து என்னும் குற்றெழுத்தாலாகிய மொழி இரண்டுடனே ஓரெழுத்தாலாகிய மொழிகள் ஆறேழ் சிறப்பின நாற்பத்திரண்டுஞ் சிறப்பினவாம்.

| | |
|---|---|
| ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | (உயிர்) |
| மா, மீ, மூ, மே, மை, மோ | (மகரம்) |
| தா, தீ, தூ, தே, தை | (தகரம்) |
| பா, பூ, பே, பை, போ | (பகரம்) |
| நா, நீ, நே, நை, நோ | (நகரம்) |
| கா, கூ, கை, கோ | (ககரம்) |
| வா, வீ, வை, வௌ | (வகரம்) |
| சா, சீ, சே, சோ | (சகரம்) |
| யா | (யகரம்) |
| நொ,து | (குறில்) |

**தொடரெழுத்தொருமொழி**

**"பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்**

**எழுத்தீ றாகத் தொடருமென்ப" (3)**

பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெத்து ஈறாகவும் பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்து ஈறாகவும் தொடரும் என்று சொல்லுவர் புலவர்.

**எ.கா:**

பகாப்பதம் - அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி

பகுபதம் - கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்தராடாதியான்.

**பகாப்பதம்**

**"பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி**

**முன்னே யொன்றாய் முடிந்நியல் கின்ற**

**பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்"  (4)**

பிரிக்கப்படுதலால் பகுதி விகுதி முதலாகிய பயனில்லாமல் காரணமின்றி இடைப்பட்ட குறியாகி படைப்புக் காலந்தொட்டு ஒன்றாகி முடிந்து நடக்கின்ற பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய நான்கும் பகாப்பதங்களாகும்.

**எ.கா:**

நிலம், நீர், நெருப்பு, காற்று - பெயர்ப்பகாப்பதம்,

நட, வா, உண், தின் - வினைப்பகாப்பதம்,

மன், கொல், போல், மற்று - இடைப் பகாப்பதம்,

உறு, கழி, நனி, தவ - உரிப் பகாப்பதம்.

**பகுபதம்**

**"பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்**

**வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே"  (5)**

பொருளும் இடமுங் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலுங் காரணமாக வருகின்ற பெயர்ச் சொற்களும் தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும் பகுபதங்களாகும்.

**பெயர்ப்பகுப்பதம்**

பொன்னன் - பொருட்பெயர்ப் பகுபதம்

அகத்தன் - இடப்பெயர்ப் பகுபதம்

ஆதிரையான் - காலப்பெயர்ப் பகுபதம்

கண்ணன் - சினைப்பெயர்ப் பகுபதம்

கரியன் - குணப்பெயர்ப் பகுபதம்

ஊணன் - தொழிற்பெயர்ப் பகுபதம்

**தெரிநிலை வினைப்பகுபதம்**

| | | |
|---|---|---|
| நடந்தான், நடக்கின்றான், நடப்பான் | - | உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் |
| நடத்திலன், நடக்கின்றிலன், நடவான் | - | எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் |
| நடந்த, நடக்கின்ற, நடக்கும் | - | உடன்பாட்டுத் தெரிநிலை வினைப் பெயரெச்சப் பகுபதம் |
| நடந்து, நடக்க, நடக்கின் | - | உடன்பாட்டுத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம் |
| நடவாத | - | எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சப் பகுபதம். |

**குறிப்புவினைப் பகுபதம்**

| | | |
|---|---|---|
| பொன்னன், ஊணன் | - | உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம் |
| அல்லன், இல்லன் | - | எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம் |
| கரிய, பெரிய | - | உடன்பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம் |
| பைய, மெல்ல | - | உடன்பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம் |
| அல்லாத, இல்லாத | - | எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம் |
| அன்றி, இன்றி, அல்லாமல், இல்லாமல் | - | எதிர்மறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம் |

**வினையாலணையும் பெயர்ப்பகுபதம்**

நடந்தான், நடந்தவன் - தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம்

பொன்னன், பொன்னவன் - குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்

பொன்னனை வணங்கினான் - பெயர்ப்பகுபதம் காலங்கொள்ளாது வேற்றுமை உருபேற்று வரும்.

**பகுபத உறுப்புக்கள்**

**"பகுதி விகுதி யிடைநிலை சாரியை**
**சந்தி விகார மாறினு மேற்பவை**
**முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்" (6)**

முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையுஞ் சாரியையுஞ் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறு உறுப்பினுள்ளும் பொருளமைதிக்கு ஏற்பவைகளை நினைத்து கூட்டி முடிக்க எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவு பெறும்.

**எ.கா:**

வேலன் - வேல் + அன், பகுதி விகுதிகளால் முடிந்தது.

உண்டான் - உண்+ ட்+ ஆன் பகுதி விகுதி இடைநிலைகளால் முடிந்தது.

உண்டனன் - உண்+ட்+அன்+அன் பகுதி விகுதி இடைநிலை சாரியைகளால் முடிந்தது.

பிடித்தனன் - பிடி+த்+த்+அன்+அன் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்திகளால் முடிந்தது.

நடந்தனன் - நட+த்+த்+அன்+அன் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி ஆகியவற்றுடன் சந்தியால் வந்த தகர வல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

**பகுதி**

**“தத்தம்,**

**பகாப்ப தங்களே பகுதி யாகும்”** (7)

பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப் பகுப்பதங்களுள்ளும் அதன் தன் முதலில் நிற்கின்ற பகாப்பதமே பகுதியாம்.

**எ.கா:**

அவன், எவன், பிறன் - பெயர்ப் பகுபதங்கட்கு இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன.

அற்று, இற்று, எற்று - குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன.

**பண்புப் பகுதிக்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி**

**“செம்மை சிறுமை சேய்மை தீமை**

**வெம்மை புதுமை மென்மை மேன்மை**

**திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்**

**இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே”** (8)

செம்மை முதல் நுண்மை இறுதியாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் இவற்றுக்கு எதிரான இவை போல்வன பிறவும் பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாகும்.

**“ஈறுபோத லிடையுகர மிய்யாதல்**

**ஆதி நீட லடியகர மையாதல்**

**தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்**

**இனமிக லினையவும் பண்பிற் கியல்பே”        (9)**

இறுதியிலுள்ள மை விகுதி கெடுதலும் நடுவில் நின்ற உகரம் இகரமாதலும் முதலில் நின்ற குறில் நெடிலாதலும் முதலில் நின்ற அகரம் ஐகாரமாதலும் தன் மெய் நடுவில் மிகுதலும் முன்னின்ற மெய் வேறோரு மெய்யாதலும் வருமெழுத்திற்கு இனவெழுத்துமிகுதலும் இவை போல்வன பிறவும் அப்பண்புச் சொற்களுக்கு இயல்பாகும்.

**தெரிநிலைவினைப் பகுதிக்குச் சிறப்பு விதி**

**“நடவா மடிசீ விடுகூ வேவை**

**நொப்போ வெளவுரி நுண்பொருந் திருந்தின்**

**தேய்பார் செல்வவ் வாழ்கே ள.்.கென்**

**றெய்திய விருபான் மூன்றா மீற்றவும்**

**செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே”        (10)**

நட என்பது முதல் அ.்.கு என்பது ஈறாகப் பொருநிய இருபத்து மூன்றாகிய ஈற்றையுடைய இவை முதலிய சொற்களெல்லாம், செய்யென்னும் வாய்ப்பாட்டு ஒருமையேவலும் மற்றைத் தெரிநிலை வினைகளின் பகாப்பதமாகிய பகுதியுமாம். சொல்லுக்கு இறுதியில் நிற்கும் இருபத்து நான்கு எழுத்துக்களுள் எகரம் வினாவிடைச் சொல்லிலும் அளபெடையிலும் தன்னை உணர்த்துமிடத்திலும் ஈறாவதல்லாமல் மற்றைச் சொற்களின் இறுதியில் நில்லாததால் அதனை ஒழித்து இருபான் மூன்றா மீற்ற என்றனார். பகுதியைப் பற்றி விளக்கும் இவ்விடத்தில் ஏவல் வாய்ப்பாடு பட வருதலால் அதனையும் உடன் கூறினார்.

**ஏவற் பகுதிக்கு எய்தியன் மேற்சிறப்பு விதி**

**“செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்**

**செய்வியென் னேவ லிணையினீ ரேவல்”        (11)**

செய் யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனி வினையின் பின் வி என்னும் விகுதியாயினும் பி என்னும் விகுதியாயினுந் தனித்து வருமாயின் செய்வி யென்னும் வாய்பாட்டேவற் பகுதியாகும். அவ்வினையின் பின் வி,பி என்னும் விகுதிகள் தன்னொடும் பிறிதோடும் இணைந்து வருமாயின் செய்விப்பி என்னும் வாய்ப்பாட்டேவற் பகுதியாம்.

**எ.கா:**

நடப்பி, நடப்பிப்பி, வருவி, வருவிப்பி வினைப் பகுதிக்குப் புறனடை

**"விளம்பிய பகுதிவே றாதலும் விதியே"** (12)

சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகளும் வேறுபடுதலும் இலக்கணமேயாகும்.

**எ.கா:**

நடத்தினான், நடப்பித்தான், நடத்துவித்தான், நடத்துவிப்பித்தான்.

## விகுதி

**"அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்**
**அஆ குடு துறு என் ஏன் அல் ஆன்**
**அம் ஆம் எம்ஏம் ஓமொ டும்மூர்**
**கடதற ஐ ஆய் இம்மின் இர்ஈர்**
**ஈயர் கயவு மென்பவும் பிறவும்**
**வினையின் விகுதி பெயரினும் சிலவே"** (13)

அன் முதல் முப்பத் தேழாகச் சொல்லப்பட்டலைகளும் இவை போல்வன பிறவும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாகும் பெயர்ப் பகுபதங்களிலும் இவற்றுட் சில விகுதிகளாகும். உம் ஊர் க ட த ற என்பது உம் மென்பதேறிய க,ட,த,ற வொற்றுக்களாகிய கும், டும், தும் , றும் என்பன. அன் விகுதி தன்மைக்கு எதிரது போற்றலென்னும் உத்தியாற் சேர்க்கப்பட்ட தாகலின் வலியுறுத்தற்குப் பின்னுங் கூறினார்.

**எ.கா:**

ஆண்பாற் படர்ககை விகுதி - அன், ஆன்

நடந்தனன், நடந்தான்.

பெண்பாற் படர்க்கை விகுதி - அள், ஆள்

நடந்தனள், நடந்தாள்.

பலர்பாற் படர்க்கை விகுதி - அர், ஆர், ப, மார்

நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார்

ஒன்றன்பாற் படர்க்கை விகுதி - து, று, டு

நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு

பலவின் பாற்படர்க்கை விகுதி - அ, ஆ

நடந்தன, நடவா

தன்மை ஒருமை விகுதி - கு டு து று என் ஏன் அல் அன்

நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென் நடந்தேன், நடப்பல், நடப்பன்.

**இடைநிலை**

**பெயரிடைநிலை**

**"இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்**
**பகுதி விகுதி பகுத்திடை நின்றதை**
**வினைப் பெயரல்பெயர்க் கிடைநிலை யெனலே"** **(14)**

இலக்கியத்தைப் பார்த்து, அவ்விலக்கியத்தின் அமைதியே இலக்கணமாகச் சொல்லுதலால் முன் சொல்லப்பட்ட பகுதியையும் விகுதியையும் நடுநின்றதை வினையபலணையும் பெயரல்லாத பெயர்களும் இடைநிலை என்று சொல்லுக.

**எ.கா:**

ஞகர இடைநிலை - அறிஞன், கவிஞன்

வகர இடைநிலை - ஓதுவான், பாடுவான்

சகர இடைநிலை - இடைச்சி, வலைச்சி

நகர இடைநிலை - பொருநன், உழுதன்

தகர இடைநிலை - வண்ணாத்தி, பாணத்தி

இச் இடைநிலை - செட்டிச்சி, தச்சிச்சி

**இறந்தகால இடைநிலை**

**"தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்**

**திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை"** (15)

தகர டகர றகர மெய்களும் இன்னென்னுங் குற்றொற்றும் ஐம்பால் மூவிடங்களிலும் காலத்தை வினைப்பகுபதங்களினுடைடய இடைநிலைகளாகும்.

**எ.கா:**

நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர், - தகரம்

உண்டான் - டகரம்

சென்றான் - றகரம்

உறங்கினான் - இன்

**நிகழ்கால இடைநிலை**

**"ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்**

**ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை"** (16)

ஆநின்று என்பதுங் கின்று என்பதுங் கிறு என்பதும் ஐம்பால் மூவிடங்களிலும் நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய நிலைகளாகும்.

எ.கா:

நடவா நின்றான் - ஆநின்று

நடக்கின்றான் - கின்று

நடக்கிறான் - கிறு

**எதிர்கால இடைநிலை**

**"பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு**

**திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில" (17)**

பகர மெய்யும் வகர மெய்யும் ஐம்பால் மூவிடங்களிலும் எதிர்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும். இம்முக்கால இடைநிலைகளும் சில முற்றுவினையெச்சவினைகட்கு இலவாம்.

எ.கா:

நடப்பான் - ப்

வருவான் - வ்

**காலங்காட்டும் விகுதி**

**"றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுந்**

**தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு**

**கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்**

**வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்**

**செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்**

**எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே" (18)**

றகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் நிகழ்கால மொழிந்த இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் தகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் டகர மெய்யோடு கூடிய உகர

விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும் ககர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் எதிர்காலத்தையும் மின் ஏவல் வியங்கோள் இ மார் விகுதியும் எதிர்காலத்தையும் பகர விகுதி இறந்த காலத்தையும் செய்யு என்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலத்தையும் ஏற்று வரும் மேலை நூற்பாவில் இவை சிலவில.

**எ.கா:**

| | |
|---|---|
| சென்று, சென்றும், சென்றேன், சென்றேம் | - இறந்த காலம் (று,றும்) |
| சேறு, சேறும், செல்வேன், செல்வேம் | - எதிர்காலம் |
| வந்து, வந்தும், வந்தேன், வந்தேம் | - இறந்த காலம் (து,தும்) |
| வருது, வருதும், வருவேன், வருவேம் | - எதிர்காலம் |
| உண்டு, உண்டும், உண்டேன், உண்டேம் | - இறந்த காலம் (டு,டும்) |
| உண்கு, உண்கும், உண்பேன்,உண்பேம் | - எதிர்காலம் |
| உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய் | - ஏவல் விகுதிகள் |
| உண்க, வாழிய, வாழியர் | - வியங்கோள் விகுதிகள் |

**வடமொழியாக்கம்**

**ஆரியமொழி தமிழில் வடமொழியாதல்**

**"இடையி னான்கு மீற்றி லிரண்டும்**
**அல்லா வச்சை வருக்கமுத லீறி**
**யவ்வாதி நான்மை ளவ்வாகு மையம்**
**பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்"** **(19)**

ஆரிய மொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடையில் நின்ற ஏழா முயிர் முதல் நான்கும் ஈற்றில் நின்ற இரண்டும் ஒழிந்து நின்ற அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் பத்தும் க, ச, ட, த, ப என்னும் ஐந்து

வருக்கங்களும் ய, ர, ல, வ என்னும் நான்கும் ளவ்வுமாகிய இருபத்தைந்தெழுத்துக்களும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்களாம் இவையன்றி மேலே உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்து வருக்கங்களினும் இடைகளில் ஒழிந்த பதினைந்தும் முப்பதா மெய் முதலிய எட்டனுள் ளகரம் ஒழிந்த ஏழுமாகிய இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழிலே தமக்கேற்ற பொது எழுத்துக்களாய்த் திரிந்து வரும்.

**ஆரியமொழி வடமொழிர்தற்குச் சிறப்புவிதி**

அவற்றுள்,

**“ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்**
**திடையின் மூன்று மவ்வம் முதலும்**
**எட்டே யவ்வு முப்பது சயவும்**
**மேலொன்று சடவு மிரண்டு சதவும்**
**மூன்றே யகவு மைந்திரு கவ்வும்**
**ஆவி றையு மீயீ றிகரமும்”** **(20)**

முன்னே திரியுமென்ற சிறப்பெழுத்துக்களுள் ஏழாமுயிர் இகரமாகவும் இருவாகவுந் திரியும் ஐந்து வருக்கங்களிலும் இடைநின்ற மும்மூன்றெழுத்தும் அவ்வவ் வருக்கத்தின் முதலெழுத்தாகத் திரியும். எட்டு மெய் மொழியிடையில் யகரமாகவுந் திரியும். முப்பதா மெய் மொழி முதலிற் சகரமாகவும் இடையில் யகரமாகவுந் திரியும். முப்பத்தொன்றாமெய் மொழி முதலிற் சகரமாகவும் இடையில் டகரமாகவுந் திரியும். முப்பத்திரண்டாமெய் மொழி முதலிற் சகரமாகவும் இடையில் தகரமாகவுந் திரியும். அகரம் இடையில் ககரமாகவுந் திரியும். பொதுவெழுத்துக்களுள்ளே மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாகத் திரியும். மொழிறுதி ஈகாரம் இகரமாகத் திரியும்.

**எ.கா:**

இடபகம், விடபகம், திட்டி - ஏழாமுயிர் இகரமாயிற்று

| | | |
|---|---|---|
| இருடி, மிருகம், விருத்தி | - | ஏழாமுயிர் இருவாயிற்று |
| நகம், நாகம், மேகம் | - | கவ்வருக்கம் |
| சலவாதி | - | சவ்வருக்கம் |
| பீடம், சடம், கூடம் | - | டவ்வருக்கம் |
| தலம், தினம், தரை | - | தவ்வருக்கம் |
| பலம், பந்தம், பாரம் | - | பவ்வருக்கம் |

ஐந்து வருக்கங்களிலும் இடைநின்ற மும்முன்றெழுத்துக்களும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாயின.

| | | |
|---|---|---|
| அயம் | - பங்கயம் | எட்டாம் மெய் யகரமாயிற்று |
| சாலை | - சூலை | முப்பதா மெய் சகரமாயிற்று |
| தேயம் | - மயானம் | முப்பதா மெய் யகரமாயிற்று |
| சண்முகன் | - சட்டி | முப்பத்தொன்றா மெய் சகரமெய்யாயிற்று |
| விடம் | - பாடை | முப்பத்தொன்றா மெய் டகரமாயிற்று |
| சபை | - சேனை | முப்பத்திரண்டா மெய் சகரமாயிற்று |
| ஆகனம் | - வாதனை | முப்பத்திரண்டா மெய் தகரமாயிற்று |

**"ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்**

**லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்**

**கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே" (21)**

ரகத்திற்கு அ,இ,ஊ என்னும் மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும் லகரத்திற்கு இ,உ என்னும் இரண்டிலொன்றும் யகரத்திற்கு இகரமும் அவ்வெழுத்துக்களை முதலிலுடைய வடமொழிகளுக்கு முதலாகி அம்மூன்றெழுத்துக்களுக்கு முன்னே வரும்.

**எ.கா:**

அரங்கம், இராமன், உரோமம் - ரகரத்திற்கு இ,உ முதலாக வந்தன.

இயக்கன் - யகரத்திற்கு இ முதலாக வந்தது

யகரத்திற்கு உகரம் முதலாக வருதலும் உண்டு உயுத்தம்.

**"இணைந்தியல் காலை யரலக் கிகரமும்**

**மவ்வக் குகரமு நகரக் ககரமும்**

**மிசை வரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற"** **(22)**

ஆரிய மொழியுள் இரண்டெழுத்து இணைந்து ஓரெழுத்தைப் போல நடக்கும் போது யகர ரகர லகரங்களுக்கு இகாரமும் மகர வகரங்களுக்கு உகாரமும் நகரத்திற்கு அகாரமும் மேலே வந்து வடமொழிகளாகும். இணைந்து முன்னின்ற ரகாரத்திற்குப் பின் உகாரமும் வரும்.

**எ.கா:**

வாக்கியம், வாச்சியம் (ய)

வக்கிரம், வச்சிரம் (ர)

சுக்கிலம், ஆமிலம் (ல)

பதுமம் (ம)

பக்குவம் (வ)

அரதநம் (ந)

## தமிழெழுத்திற் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்

**"றனழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள**

**பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே"** **(23)**

றகர னகர ழகர எகர ஒகரங்களைந்தும் உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்தெட்டும் தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம். ஒழிந்த இருபத்தேழு எழுத்துக்களும் பொது எழுத்துக்களாம்.

## வினாக்கள்

1. பகுபத உறுப்புகள் யாவை? விளக்குக.
2. பகுபதம் பகாபதம் விளக்கம் தருக.
3. தொடரெழுத்தொருமொழி விளக்கம் தருக.
4. பெயர்ப்பகுப்பதம் சான்றுத் தருக.
5. வினையாலணையும் பெயர் என்றால் என்ன? விளக்கம் தருக.
6. இடைநிலை என்றால் என்ன? வகைகளைச் சான்றுடன் விளக்குக.
7. வினைபகுபதம், தெரிநிலை வினை - சான்றுடன் விளக்குக.

# அலகு – 3

## உயிரீற்றுப் புணரியல்

உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர் முதலும் மெய்ம்முதலுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

இவ்வியலில் புணர்ச்சி இன்னதென்பதும் பொருட் புணர்ச்சியும் எழுத்துப் புணர்ச்சியும், பொதுப் புணர்ச்சியும் உயிர் முன் வல்லினம் புணர்தலும் அகரவீற்றுக்குச் சிறப்பு விதியும், ஆகார வீற்றுச் சிறப்பு விதியும், இகர வீற்றுச் சிறப்பு விதியும் உகர வீற்றுச் சிறப்பு விதியும், ஐகாரவிற்றுச் சிறப்பு விதியும் கூறப்பட்டுள்ளன.

**புணர்ச்சி இன்னதென்பது**

**"மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுற்**
**தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்**
**பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்**
**இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே"** (1)

மெய்யையும் உயிரையும் முதலும் இறுதியாக உடைய பகாப்பதம் என்ற இரண்டு பதங்களும் தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய் அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது பொருந்துமிடத்து நிலை மொழியும் வருமொழியும் இயல்பாகவாயினும் விகாரமாயினும் பொருந்துவது புணர்ச்சியாம்.

புணர்ச்சி நான்கு வகைப்படும் அவை முறையே

1. உயிரீற்று முன் உயிர் முதல்மொழி புணர்தல்
2. உயிரீற்றின் முன் மெய்ம் முதல்மொழி புணர்தல்
3. மெய்யீற்றின் முன் உயிர் முதல்மொழி புணர்தல்
4. மெய்யீற்றின்
5. மெய்ம் முதல்மொழி புணர்தல் ஆகியவை ஆகும்.

மரம் - மெய்ம்முதல் மெய்யீறு

அணி - உயிர் முதல் உயிரீறு

மணி - மெய்ம்முதல் உயிரீறு

அணில் - உயிர் முதல் மெய்யீறு

**அல்வழி வேற்றுமை இவை என்பது**

**"வேற்றுமை ஐம்முத லாறா மல்வழி**
**தொழில்பண் புவமை யும்மை யன்மொழி**
**எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி**
**தழுவு தொடரடுக் கெனவீ ரேழே"** (2)

வேற்றுமைப் புணர்ச்சி ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள் பொருந்துவதாம் அல்வழிப் புணர்ச்சி வினைத்தொகையும், பண்புத் தொகையும், உவமைத் தொகையும், உம்மைத் தொகையும், அன்மொழித் தொகையும், எழுவாய்த் தொடரும், விளித் தொடரும், பெயரெச்ச வினையெச்சத் தொடர்களும் தெரிநிலை வினைமுற்று குறிப்பு வினைமுற்றுத் தொடர்களும் இடைச் சொற்றொடரும் உரிச் சொற்றொடரும் அடுக்குத் தொடரும் எனப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி பதினான்காம்.

**வேற்றுமை**

| **வேற்றுமைத்தொகை** | **உருபு** | **வேற்றுமை விரி** |
|---|---|---|
| நிலங்கடந்தான் | ஐ | நிலத்தைக் கடந்தான் |
| கல்லெறிந்தான் | ஆல் | கல்லால் லெறிந்தான் |
| கொற்றன் மகன் | கு | கொற்றனுக்கு மகன் |
| மலை வீ ழருவி | இன் | மலையின் வீழருவி |

| | | |
|---|---|---|
| சாத்தன் கை | அது | சாத்தனது கை |
| குன்றக் கூகை | கண் | குன்றத்தின் கட்கூகை |

அல்வழி,

| | | |
|---|---|---|
| கொல்யானை | - | வினைத்தொகை |
| கருங்குவளை | - | பண்புத்தொகை |
| மதிமுகம் | - | உவமைத்தொகை |
| இராப்பகல் | - | உம்மைத் தொகை |
| பொற்றொடி | - | அன்மொழித்தொகை |
| வேலன் வந்தான் | - | எழுவாய்த் தொடர் |
| வேலா வா | - | விளித்தொடர் |
| வந்த வேலன் | - | பெயரெச்சத் தொடர் |
| வந்து போனான் | - | வினையெச்சத் தொடர் |
| வந்தான் வேலன் | - | தெரிநிலை வினைமுற்றுத் தொடர் |
| பெரியன் வேலன் | - | குறிப்பு வினைமுற்றுத் தொடர் |
| மற்றொன்று | - | இடைச் சொற்றொடர் |
| நனிபேதை | - | உரிச்சொற்றொடர் |
| பாம்பு பாம்பு | - | அடுக்குத் தொடர் |

**இயல்புப் புணர்ச்சி**

**“விகார மனைத்து மேவல தியல்பே”** **(3)**

மேல் வரும் விகாரவகையனைத்தும் அடையாதது இயல்புப் புணர்ச்சியாகும்.

**எ.கா:**

பொன்மலை, புகழழகிது, ஒளிமணி

**விகாரப்புணர்ச்சி**

**"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்**

**மூன்று மொழிமூ விடத்து மாகும்"** **(4)**

எழுத்தாயினுஞ் சாரியையாயினுந் தோன்றலும் வேறுபடுதலும் கெடுதலும் மேற்சொன்ன விகாரமாகும். இம்மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளின் முதல் இடை கடை என்னும் மூன்றிடங்களிலும் ஏற்றபடி வரும்.

**எ.கா:**

| | | |
|---|---|---|
| பூ + கொடி – பூங்கொடி | - | வருமொழி முதலில் மெய் தோன்றிற்று |
| பல் + தாழிசை – ப.்.றாழிசை | - | வருமொழி முதலிலும் நிலைமொழி ஈற்றிலும் மெய்கள் திரிந்தன. |
| நிலம்+ வலயம் - நிலவலயம் | - | நிலைமொழி ஈற்று மெய் கெட்டது. |
| ஆறு பத்து – அறுபது ள | - | நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழி இடையொற்றுக் கெட்டது. |
| நாழி + உரி – நாடுரி | - | நிலைமொழி ஈற்றுயிர்மெய் கெட்டு டகர மெய் தோன்றிற்று |
| தமிழ் பிள்ளை – தமிழ்ப்பிள்ளை | - | நிலைமொழி ஈற்றுற் சாரியை தோன்றிற்று |
| பனை காய் - பனங்காய் | - | நிலைமொழி ஈற்றுயிர் கெட்டுச் சாரியை தோன்றிற்று |
| ஒன்பது பத்து - தொண்ணூறு | - | நிலைமொழி வருமொழிகள் மூன்றிடத்தும் விகாரப்பட்டன. |

## செய்யுள் விகாரம்

**"வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்**

**விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி"** (5)

மெல்லொற்றை வல்லொற்றாக்கலும் வல்லொற்றை மெல்லொற்றாக்கலும் குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும் நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும் இல்லாத எழுத்தை வருவித்தலும் உள்ள எழுத்தை நீக்கலும் செய்யுளிலக்கணத்தை நோக்கி வேண்டுமிடத்து வரும்.

**எ.கா:**

குறுத்தாட்பூதஞ் சுமந்த வறக்கதிராழியெம்அண்ணலைத்தொழினே – குநற்தாள் என்பது குநந்தாள் என வலித்து நின்றது.

தண்டையி னினக்கிளி கடிவோள் பண்டை எல்லண் மானோக் கினளே – தட்டை என்பது தண்டை என மெலிந்து நின்றது.

ஈசன் எந்தை இணையடி நீழலே - நிழல் என்பது நீழல் என நீண்டு நின்றது.

யானை – பெயருத்த் திருந்த விலங்கிலைவேற் றென்னன்றிருந்தார் நன்றென்றேன் தியேன் - தீயேன் என்பது குறுகி தியேன் என்றானது.

**"ஒருமொழி மூவகைக் குறைதலு மனைத்தே"** (6)

ஒருசொல்லினுடைய முதல், இடை, கடை என்னும் மூன்றிடங்களில் ஓரிடத்து குறைந்து வருதலும் அச்செய்யுள் விகாரம் ஆகுமாம்.

**எ.கா:**

மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி – தாமரை என்பது மரை என குறைந்து நின்றது

வேதின வெரிநி னோதி முதுபோத்து – ஓந்தி என்பது ஓதி என இடைக்குறைந்து நின்றது.

நீலுண் டுகிலிகை கடுப்ப – நீலம் என்பது நீல் என கடைக் குறைந்து நின்றது.

புணர்ச்சி விகாரத்தில் வருவதோர் ஐயம் ஒழித்தல்

**"ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்" (7)**

ஒரு புணர்ச்சிக்கு ஒன்றேயன்றி இரண்டு மூன்று விகாரங்களும் வரப்பெறும்.

**எ.கா:**

யானை + கோடு = யானைக்கோடு – தோன்றல் விகாரம்

நிலம்+ பனை = நிலப்பனை – கெடுதல் விகாரம்

**பொதுப்புணர்ச்சி**

**எல்லா வீற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்**

**"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்**
**முன்வரு ஞ ந ம ய வக்க ளியல்புங்**
**குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி**
**மிகலுமாம் ணளனல வழிநத் திரியும" (8)**

இயல்பினாலாயினும், விதியினாலாயினு் இருபத்து நான்கெழுத்தையும் ஈறாக உடைய பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல் என்னும் பலவகைப்பட்ட சொற்களும் முன்னே வரும் ஞகர, நகர, மகர, யகர, வகரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாதலும் குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்யே ஓரெழுத் தொருமொழியாகிய உயிர்மெய் என்னும் ஐகாரமே நொவ்வே துவ்வே என்பவைகளுக்கு முன் வரும் ஞகார, நகர, மகரங்கள் மிக்குமுடிதலும் ஆகும்.பின் ஈற்றின் இயல்பாதலன்றித் திரியும்.

**எ.கா:**

மண் + நீட்சி = மண்ணீட்சி

முள் + நீட்சி = முண்ணீட்சி

வேற்றுமையில் நகரம் திரிந்தது.

மண் + நீண்டது = மண்ணீண்டது

முள் + நீண்டது = முண்ணீண்டது

அல்வழியில் நகரம் திரிந்தது.

**பொதுப்பெயர் உயர்திணைப் பெயரீறு**

**“பொதுப் பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்**
**வலிவரி னியல்பா மாவி யரமுன்**
**வன்மை மிகாசில விகாரமா முயர்திணை”** **(9)**

பொதுப்பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வல்லெழுத்து முதல் மொழிகள் வரின் இயல்பாகும். உயிரையும் யகர, ரகர மெய்களையும் ஈறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும் முன்வரும் வல்லெழுத்துக்குள் மிகாவாம். மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப் பெயர்களுள் சில பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுதலும் உடையனவாம்.

**எ.கா:**

சாத்தன் + குறியன் - சாத்தன் குறியன்

சாத்தன் + சிறிது - சாத்தன் சிறிது

சாத்தன் + தீயன் - சாத்தன் தீயன்

சாத்தன் + பெரிது - சாத்தன் பெரிது

விரவுப்பெயர் அல்வழியில் இயல்பாயது.

சாத்தன் + கை – சாத்தன்கை

சாத்தன் + செவி – சாத்தன்செவி

சாத்தன் + தலை – சாத்தன் தலை

சாத்தன் + புறம் – சாத்தன் புறம்

**வேற்றுமையில் இயல்பாயிற்று.**

**வினாப்பெயர் விளிப்பெயர் முன் வல்லினம்**

**"ஈற்றியா வினாவிளிப் பெயர் முன்வலி யியல்பே" (10)**

ஆ,ஏ,ஓ என்னும் முன்னீற்று வினா முன்னும் யா என்னும் வினாப் பெயர் முன்னும் உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும்.

சாத்தனா + கொண்டான் - சாத்தனாகொண்டான்

சாத்தனே + கொண்டான் - சாத்தனேகொண்டான்

சாத்தனோ + கொண்டான் - சாத்தனோகொண்டான்

யா + கொண்டான் - யாகொண்டான்

யா வினா முன்வலி இயல்பாயிற்று.

நம்பி + கொள் - நம்பிகொள்

விடலை + கொள் - விடலைகொள்

கிள்ளாய் + கொள் - கிள்ளாய்கொள்

தாய் + கொள் - தாய்கொள்

விளிப்பெயர் முன் வலி இயல்பாயிற்று

## முன்னிலை வினை ஏவல்வினை முன் வல்லினம்

**“ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை**

**ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே”** (11)

உயிரையும் ய,ர,ழ என்னும் மூன்று மெய்களையும் இறுதியாகவுடைய முன்னிலைவினை முன்னும் ஏவல் வினை முன்னும் வருங் க,ச,த பக்கள் இயல்புடன் விகற்பமுமாம். முன்னிலை வினை, தன்மைவினை படர்க்கைவினைகளுக்கு இனமாய் மூன்று காலத்தும் வருவதாய் முன்னிற்கும் பொருளினது தொழிலை உணர்த்தும் வினை, ஏவல் வினை, இனமன்றி முன்னிலை ஒன்றற்கே உரியதாய் முன்னிற்கும் பொருளை ஏவற்படுத்தி எதிர்காலத்தில் மட்டுமே வருவது.

**எ.கா:**

உண்டி + சாத்தா – உண்டிசாத்தா

உண்டாய் + சாத்தா – உண்டாய்சாத்தா

உண்டீர்+ சாத்தரே – உண்டீர் சாத்தரே

ஆவி ய ர இறுதி முன்னிலைவினைக்கு ஈறானது.

வா + கொற்றா – வாகொற்றா

ஆய் + கொற்றா – ஆய்கொற்றா

சேர்+ கொற்றா – சேர்கொற்றா

தாழ்+ கொற்றா – தாழ்கொற்றா

ஆவி ய ர ழ இறுதி ஏவல் முன் இயல்பாயின.

**உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி**

**உயிர்முன் உயிர் புணர்தல்**

**"இஈ ஐவழி யவ்வு மேனை**
**உயிர்வழி வவ்வு மேமுனிங் விருமையும்**
**உயிர்வரி னுடம்பட மெய்யென் றாகும்"** (12)

இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும் அ,ஆ,உ,ஊ,ஒ,ஓ,ஔ என்னும் உயிர்களின் முன்னே வகரமும் ஏகாரத்தின் முன்னே யகரமும் வகரமும் ஆகிய இரண்டும் உயிர் முதல் மொழி வரின் உடம்படுமெய் என்றுஆகும்.

**எ.கா:**

மணி + அழகிது – மணியழகிது

தீ + அழகிது - தீயழகி

மலை + அழகிது – மலையழகிது

அல்வழியில் இ ஈ ஐ முன் யகரம் வந்தது.

மணி + அழகு – மணியழகு

தீ + அழகு – தீயழகு

மலை + அழகு – மலையழகு

வேற்றுமையில் இ ஈ ஐ முன் யகரம் வந்தது.

**வினாச் சுட்டின் முன் நாற்கணமும் புணர்தல்**

**"எகர வினாமுச் சுட்டின் முன்னர்**
**உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்**
**பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு**
**நீளின் யகரமுந் தோன்றுத னெறியே"** (13)

எகர வினா விடைச் சொல்லின் முன்னும் மூன்று சுட்டிடைச் சொல்லின் முன்னும் உயிரும் யகரமும் வரின் வகரமும் யகர மொழிந்த மெய்கள்வரின் அவ்வந்த மெய்களும் செய்யுளின் கண் சுட்டு நீண்டு வருமிடத்து யகரமும் மிகுதல் முறையாம்.

**எ.கா:**

எவ்வணி, எவ்யானை.

**குற்றியலுகர முன்னுஞ் சில முற்றியலுகர முன்னும் உயிரும் யகரமும் புணர்தல்**

**"உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்**

**யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி"** (14)

குற்றியலுகரம் உயிர் முதல் மொழி வந்தால் தனக்கிடமாகிய மெய்யை விட்டுக் கெடும். யகர முதல் மொழி வந்தால் இகரமாகத் திரியும். முற்றும் அற்று ஒரோ வழி முற்றியலுகரமும் அவ்விரு விதியும் பெறும்.

**எ.கா:**

நாகு + அரிது – நாகதிது

நாகு + அருமை – நாகருமை

உயிர் வரக் குற்றியலுகரம் கெட்டது.

நாகு + யாது – நாகியாது

நாகு + யாப்பு – நாகியாப்பு

யகரம் வரக் குற்றியலுரம் இகரமாகத் திரிந்தது.

**உயிரீற்று முன் வல்லினம்**

**"இயல்பினும் விதியினு நின்ற வுயிர்மெய்**

**க ச த ப மிகும்வித வாதன மன்னே"** (15)

இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின் முன் க,ச.த பக்கள் பெரும்பாலும் மிகும் பின் சிறப்பு விதியிற் சொல்லாதவைகளுள்,

**எ.கா:**

ஆடூஉக் குறியின், நம்பிக் கொற்றன்

ஈடூஉக்கை, செட்டித் தெரு.

உயர்திணைப் பெயர் முன் இரு வழியும் வல்லெழுத்துக்கள் மிக்கன.

சாத்திப்பெண் - பொதுப்பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கது.

விளக்குறிது, தாராக் கடிது, தீப்பெரிது, வடுத்தீது, கொக்குக் கடிது

அ.்.றிணைப் பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்க்கள் மிக்கன.

**உயிரீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் புணர்தல்**

**"மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து**

**வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே" (!6)**

உயிரீற்றுச் சில மரப் பெயர்களுக்கு முன் அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்மு மிகப் பெறுவனவுஞ் சில உளவாம்.

**எ.கா:**

விள + காய் – விளங்காய்

கள + கனி – களங்கனி

மா + துளிர் – மாந்துளிர்

காயா + பூ – காயாம்பூ

**அகர வீற்றுச் சிறப்பு விதி**

**"செய்யிய வென்னம் வினையெச்சம் பல்வகைப்**

**பெயரி னெச்சமுற் றாற னுருபே" (17)**

செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சமும் பலவகைப்பட்ட பெயெரெச்சங்களும் முற்று வினைகளும் ஆறாம் வேற்றுமை அகர உருபும் அ.்.றிணைப் பன்மைப் பெயரும் அம்ம என்னும் உரையசை இடைச்சொல்லும் முன்வரும் வல்லெழுத்க்கள் இயல்பாம்.

**எ.கா:**

உண்ணிய கொண்டான், உண்ணிய சென்றான்

செய்யிய என்னும் வினையெச்சம் முன்வலி இயல்பாயது.

உண்ட குதிரை, வெளுத்த குதிரை, உற்ற குதிரை, கடிய குதிரை

பலவகைப் பெயரினெச்சமுன் வலி இயல்பாயது.

உண்டன குதிரை, அமர்முகத்தன குதிரை, வாழ்க கொற்றா, வாழிய

சாத்தா

பல்வகை முற்று முன்வலி இயல்பாயது.

தனகைகள், தனசெவிகள்

ஆறனுருபின் முன் வலி இயல்பாயது.

**“வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்**

**ஏகலு முரித்த.்.தேகினு மியல்பே”** (18)

வாழிய என்னும் வியங்கோள் முற்றினுடைய இறுதியிலுள்ள யகர உயிர்மெய் குறைலும் உரித்தாகும். அவ்வுயிர்மெய் குறைந்து இகர வீறாய் நின்றாலும் இயல்பேயாம்.

**எ.கா:**

ஆவாழி, அந்தணர் வாழி

**“சாவென் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி”** (19)

சாவ என்னஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய இறுதியில் உள்ள வகர உயிர்மெய் கெட்டுப் புணர்தலும் விதியாகும்.

**எ.கா:**

சாவ + குத்தினான் - சாக்குத்தினான்.

**"பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்**

**இயல்பு மிகலு மகர மேக**

**லகரம் றகர மாகலும் பிறவரின்**

**அகரம் விகற்ப மாகலு முளபிற" (20)**

பல,சில என்னும் இவ்விரு சொல்லும் தமக்கு முன்னே தாம் வருமாயின் இயல்பாதலும் மிகுதலும் அகரங் கெட லகரம் றகரமாகத் திரிதலும் இவற்றின் முன் பிற மொழிகளுள் யாதாயினு மொன்றுவரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம்.

**எ.கா:**

பலபல, சிலசில.

## ஆகார வீற்றுச் சிறப்பு விதி

**"அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா" (21)**

அல்வழியில் ஆவும் மாவுமாகிய இரு பெயரும் மியா என்னும் முன்னிலையான இடைச்சொல்லும் ஆகார வீற்று அ.்.றிணைப் பன்மை எதிர்மறை முற்று வினையுமாகிய முன் வல்லினம் இயல்பாகும்.

**எ.கா:**

ஆ குறிது, மா குறிது

அல்வழியில் ஆ,மா முன் வலி இயல்பாயிற்று.

கேண்மியா கொற்றா, கேண்மியா சாத்தா

மியா என்னும் முன்னிலையசை முன்வலி இயல்பாயிற்று.

**"குறியதன் கீழாக் குறுகலு மதனோ**

**டுகர மேற்றலு மியல்பு மாற் தூக்கின்" (22)**

குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் குறுகி அகரமாதலும் அதனோடு உகரம் ஏற்றலும் அவ்வகரமாதலுடனே உகரம் பெறுதலும் அவ்விரண்டுமின்றித் தன்னியல்வில் நிற்றலுமாகிய மூன்று விதியும் ஆகும்.

**எ.கா:**

நிலவரி கானல்வாய் நின்று.

**இகர வீற்றுச் சிறப்பு விதி**

**"அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்**

**தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே" (23)**

அன்றி இன்றி என்னும் எதிர் மறைக் குறிப்பு வினையெச்சங்களின் ஈற்றிலுள்ள இகரமும் செய்யுளில் உகரமாய்த் திரிந்துவரின் இயல்பாகும்.

**எ.கா:**

வாளன்று பிடியா வன்கணாடவர் - அன்றி, அன்று எனத் திரிந்தது.

**"உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட**

**மருவும் டகர முரியின் வழியே**

**யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே" (24)**

உரி என்னும் அளவுப் பெயர்வரின் நாழி என்னும் அளவுப் பெயரினது ஈற்றிலுள்ள ழி என்னும் உயிர் மெய் நீங்க டகர மெய் வரும். உரி என்னும் அளவுப் பெயரின் பின யகர உயிர்மெய் வரும். அவ்வுயிர்மெய் வருதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின்

**எ.கா:**

நாழி+ உரி – நாடுரி

**"நாழியின் ஈற்றுமெய் கெட்டு டகரந் தோன்றிற்று.**

**சுவைப்பு ளி முன்னின மென்மையுந் தோன்றும்" (25)**

அறு சுவையுள் ஒன்றை உணர்த்தும் புளி என்னும் பெயர் முன் இனமாகிய மெல்லெழுத்துக்களும் ஒரோவிடத்துமிகும்.

**எ.கா:**

புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர், புளிப்பாளிதம்.

**இகர ஐகார வீற்றுச் சிறப்பு விதி**

**“அல்வழி இஐம் முன்ன ராயின்**

**இயல்பு மிகலும் விகற்பமு மாகும்” (26)**

இகர ஐகார ஈற்று அ.்.றிணைப் பெயர் முன் அல்வழியினிடத்து வருமாயின் இயல்பாதலும் மிகுதலுமம் ஒன்றற்கே ஒருகால் மிகாமையும் ஒருகால் மிகுதலும் ஆகும்.

**எ.கா:**

பருத்திகுருதி, யானைகரிது – எழுவாயில் வலி இயல்பானது

பரணிகார்த்திகை, யானைகுதிரை – உம்மைத் தொகையில் வலி இயல்பாயது

மாசித்திங்கள், சாரைப்பாம்பு – பண்புத் தொகையில் வலி மிக்கது.

**ஈகார வீற்றுச் சிறப்பு விதி**

**“ஆமுன் பகரவீ யனைத்தும் வரவக்குறுகும்**

**மேலன வல்லழி யியல்பா கும்மே” (27)**

ஆ என்னும் பெயர் முன் நின்ற பகர ஈகாரம் இரு வழியும் நாற்கணமும் வருங்காற் குருகி இகரமாகும். அல்வழியே இயல்பைப் பெறும்.

**“பவ்வீ நீமீ முன்ன ரல்வழி**

**இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே” (28)**

பகர மெய்யின் மேல் ஏறி நின்ற ஈகாரஈற்று இடக்கர்ப் பெயர்க்கும் நீ என்னும் முன்னிலைப் பெயர்க்கும் மீ என்னும் பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயர்க்கும் முன்னே வரும் வல்லினம், அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகும். மீ என்னுஞ் சொல்லுக்கு முன் வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலும் ஆகும்.

**எ.கா:**

பீ குறிது, பீ சிறிது, பீ தீது, பீ பெரிது

இயல்பாயின.

மீக்கூற்று – வலிமிக்கது

மீத்தோல் – மலி மிக்கது.

## முற்றுகர வீற்றுச் சிறப்பு விதி

**"மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ**

**றாகு முகர முன்ன ரியல்பாம்" (29)**

மூன்றாம் வேற்றுமை உருபிற்கும், ஆறாம் வேற்றுமை உருபிற்கும் எண்ணிற்கும் வினைத்தொகைக்கும், சுட்டுப்பெயருக்கும் ஈறாகிய முற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

## குற்றுகர வீற்றுச் சிறப்பு விதி

**"வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி" (30)**

வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகர வீற்றின் முன்னும் அல்வழிக்கண் மிகாமல் இயல்பாகும்.

**எ.கா:**

நாகு கடிது, ஆறுதலை – நெடில் தொடர் முன் வலி இயல்பாயிற்று.

எ.்.கு சிறிது, அ.்.கு பிணி – ஆய்தத்தொடர் முன் வலி இயல்பாயிற்று.

வரகு சிறிது, பொருது சென்றான் – உயிர்த்தொடர் முன் வலி

இயல்பாயிற்று.

**"இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்**

**மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை" (31)**

இடைத்தொடர் முன்னும் ஆய்தத்தொடர் முன்னும் ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும் ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர் முன்னும் வேற்றுமை மிகா வல்லினம் வரும்.

**"நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுட்**

**டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே" (32)**

நெடில்தொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகர மொழினயுய் அவ்வுகரம் ஏறிநின்ற டகர றகர என்னும் இரண்டொற்றும் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டும்.

**எ.கா:**

ஆடு + கால் - ஆட்டுக்கால்

சோறு + வளம் - சோற்றுவளம்

ஆறு + அணி - ஆற்றணி

வீடு + நிலம் - வீட்டுநிலம்

**"மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்**

**றம்மின வன்றொட ராகா மன்னே" (34)**

மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சில மொழிகள் வேற்றுமையிலே தமக்கு இனமாகிய வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாக பெரும்பாலன ஆகாஇ

மருந்து + பை - மருந்துப்பை

சுரும்பு + நாண் - சுருப்புநாண்

கரும்பு + வில் - கருப்பு வில்

கன்று + ஆ - கற்றா

**"ஐயீற் றுடைகுற் றுகரமு முளவே"** **(35)**

ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்றுவரும். மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுஞ் சில உளவாம்.

**எ.கா:**

பண்டு + காலம் - பண்டைக்காலம்

இன்று + நாள் - இற்றைநாள்

**"திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்**

**நிலையீற் றுயிர் கவ்வொற்று நீங்கலும்**

**றகரம் னலவாத் திரிதலு மாம்பிற"** **(36)**

திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிற பெயர்களும் புணருமிடத்து நிலைமொழி ஈற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன் மேல் நின்ற ககர மெய்யும் கெடுதலும் அவ்விடத்து நின்ற றகர மெய் னகர மெய்யாகவும் லகர மெய்யாகவும் திரிதலும் ஆகும்.

**எ.கா:**

வடக்கு + கிழக்கு – வடகிழக்கு

வடக்கு + மேற்கு – வடமேற்கு

**"தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்"** **(37)**

காய் என்னுஞ் சொல் வருமொழியாக வருமாயின் தெங்கு என்னும் நிலைமொழி நீண்டு ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும்.

**எ.கா:**

தெங்கு + காய் - தேங்காய்

**"எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்**

**ஒன்று முதலெட் டீறா மெண்ணுண்**

**முதலீ ரெண்முத னீளு மூன்றா**

**றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்**

**ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்**

**ஏகு மேற்புழி என்மனார் புலரும்" (38)**

எண்ணுப் பெயரும் நிறைப் பெயரும் அளவுப் பெயரும் பிற பெயர்களும் வரின் நிலைமொழியாக நின்ற ஒன்று முதல் எட்டு ஈறு எண்களும் முதலிலுள்ள இரண்டெண்களும் முதல் குறில் நீளும் மூன்றும் ஆறும் ஏழும் முதல் நெடில் குறுகும். ஆறும் ஏழும் அல்லாத ஆறெண்களினுடைய இறுதியிலுள்ள உயிருங்கெடும்.

**"ஒன்றன் புள்ளி ரகர மாக**

**இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே" (39)**

ஈற்றுயிர் மெய் கெட நின்ற ஒன்று என்னும் எண்ணிணது னகர மெய் ரகர மெய்யாக இரண்டு என்னும் எண்ணினது ணகர மெய்யும் ரகரதின் மேல் நின்ற அகர உயிருங் கெட உவ் வரும்.

**எ.கா:**

ஒருபது, இருபது, ஒருகழஞ்சு, இருகழஞ்சு.

**"மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்" (40)**

மூன்று என்னும் எண்ணிணது னகர மெய் கெடுதலும் வரும் மெய்யாகத் திரிதலும் ஆகும்.

**எ.கா:**

மூன்று + ஒன்று – மூவொன்று

மூன்று + உழக்கு – மூவுழக்கு

**“நான்கன் மெய்யே லறவா கும்மே”** **(41)**

நான்கு என்னும் எண்ணினது னகர மெய் லகர மெய்யாகவும் றகர மெய்யாகவும் திரியும்.

**எ.கா:**

நான்கு + அடி – நாலடி

நான்கு + வட்டி – நால்வட்டி

**“ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்”** **(42)**

ஐந்து என்னும் எண்ணின நகர மெய் வரும் மெய்யாகத் திரிதலும் வரும் மெய்க் கினமாகத் திரிாலும் கெடுதலுமாம்.

**எ.கா:**

ஐந்து + மூன்று – ஐம்மூன்று

ஐந்து + பொறி – ஐம்பொறி

**“எட்டனுடம்புணவ் வாகு மென்ப”** **(43)**

எட்டு என்னும் எண்ணினது டகர மெய் நாற்கணமும் வர ணகர மெய்யாகத் திரியும் என்று சொல்லுவர்.

**எ.கா:**

எட்டு + பத்து – எண்பது

எட்டு + நாழி – எண்ணாழி

எட்டு + வகை – எண்வகை

**“ஒண்பா னொடுபத்து நூறு மொன்றின்**

**முன்னதி னேனைய முரணி யொவ்வொடு**

**தகர நிறீஇப்ப.்.  தகற்றி னவ்வை**

**நிரலே ணளவாத் திரிப்பது நெறியே”** (44)

ஒன்பதுடனே பத்து என்பதும் வந்து புணருமாயின் முன்னதாகிய நிலை மொழியினின்றும் மற்ழற வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும் முறைஆய நூறெனவும் ஆயிரமெனவுந் திரிந்து நிலைமொழி முதலிலுள்ள ஒகரவுயிரோடு தகர மெய்யை அதற்கு ஆகாரமாக நிறுதி அந்நிலைமொழி இறுதியிலுள்ள ப.்.தைக் கெடுத்து அம்மொழி முதற்கு அயல் நின்ற னகர மெய்யை ணகர மெய்யாகவும் னகர மெய்யாகவும் திரிப்பது முறையாகும்.

**எ.கா:**

ஒன்பது பத்து – ஒன்பதுநூறு

தொன்பது நூறு – தொன்நூறு

தொண் நூறு – தொண்ணூறு.

**“முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்**

**இடையொற் றேக லாய்த மாகல்**

**எனவிரு விதியு மேற்கு மென்ப”** (45)

ஒன்று முதலாகிய எட்டு எண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணினது நடு நின்ற தகர மெய் கெடுதலும் தகர மெய் நின்ற விடத்து அது கெட ஆய்தம் வருதலும் என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும் என்று சொல்லுவர்.

**எ.கா:**

ஒன்று + பத்து - ஒருபத்து, ஒருபது, ஒருப.்.து

இரண்டு + பத்து - இருபத்து, இருபது, இருப.்.து

மூன்று + பத்து - முப்பத்து, முப்பது, முப்ப∴து

நான்கு + பத்து - நாற்பத்து, நாற்பது, நாற்ப∴து

ஐந்து + பத்து - ஐம்பத்து, ஐம்பது, ஐம்ப∴து

ஆறு + பத்து - அறுபத்து, அறுபது, அறுப∴து

ஏழு + பத்து - எழுபத்து, எழுபது,எழுப∴து

எட்டு + பத்து - எண்பத்து, எண்பது, எண்ப∴து.

**"ஒருப∴ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்**

**எண்ணு மவையூர் பிறவு மெய்தின்**

**ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே" (46)**

ஒருப∴து முதலாகிய எட்டு எண்களின் முன்னும் ஒன்று முதலாகிய ஒன்பதெண்களும் அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின் நிலை மொழியிலே நின்ற ஆய்தங்கெட தகரம் அவ்வாய்தம் நின்றவிடத் வரும்.

**எ.கா:**

ஒருப∴து + ஒன்று – ஒருபத்தொன்று

**"ஒன் றுமுத லீரைந் தாயிரங் கோடி**

**எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்**

**ஈற்றுயில் மெய்கெடுத் தின்னு மிற்றும்**

**ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே" (47)**

ஒன்று முதலிய பத்தும் ஆயிரமுங் கோடியுமாகிய எண்ணுப் பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பிற பெயரும் வந்து புணருமாயின் பத்தினது இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுத்து இன் சாரியையாயினும் இற்றுச் சாரியையாயினும் அவ்விடத்திற்கேற்பது ஏற்று நிற்கும். ஒன்பதென்னும் நிலைமொழியும் இப்படியே

எண்ணுப் பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப் பெறும்.

**எ.கா:**

பத்து ஒன்று – பதினொன்று, பதிற்றொன்று

பத்து ஆயிரம் – பதினாயிரும், பதிற்றாயிரம்

பத்து கோடி – பதின்கோடி, பதிற்றுக்கோடி

பத்து கலம் – பதின்கலம், பதிற்றுக்கலம்.

**"இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்**

**கரந்திட வொற்று னவ்வாகு மென்ப" (48)**

இரண்டு என்பது முன்வருமாயின் பத்தென்னும் நிலை மொழியினது ஈற்றிலுள்ள து என்னும் உயிர்மெய் கெட தகர மெய் னகர மெய்யாகத் திரியும் என்பர்.

**எ.கா:**

பத்து + இரண்டு - பன்னிரண்டு

**"ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்**

**முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்**

**வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி" (49)**

ஒன்பதென்னும் எண் ஒன்றையும் ஒழித்து நின்ற ஒன்று முதற் பத்து ஈறாகிய ஒன்பது எண்ணிணையும் இரட்டித்துச் சொல்லின் நிலைமொழியினது முதலெழுத்தல்லாதவைகளெல்லாம் கெட உயிர் முதலான எண்வரின் வகர மெய்யும் மெய் முதலான எண்வரின் வந்த மெய்யும் மிகுதல் முறையாகும்.

**எ.கா:**

ஒன்று + ஒன்று + ஒன்று - ஒவ்வொன்று

இரண்டு + இரண்டு + இரண்டு - இவ்விரண்டு

**ஊகார வீற்றுச் சிறப்பு விதி**

**“பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்” (50)**

பூ என்னும் பெயர்ச் சொல்லின் முன் இனமாகிய மெல்லினமும் மிகும்.

**ஏகார ஓகார ஈற்றுச் சிறப்புவிதி**

**“இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே” (51)**

இடைச்சொல்லாகிய ஏகாரத்தின் முன்னும் ஓகாரத்தின் முன்னும் வரிற் பொதுவிதியால் மிகாது இயல்பாகும்.

**ஐகார ஈற்றுச் சிறப்பு விதி**

**“வேற்றுமை யாயி னைகா னிறுமொழி**

**ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே” (52)**

ஐகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமை ஆயின் ஈற்று ஐகாரங் கெடுதலுடனே அம் ஏற்பவும் உள அம்முச்சாரியை பெற்று முடிவனவும் சில உள.

**எ.கா:**

வழுதுை + ண + காய் - வழுதுணங்காய்

தாழை + பூ - தாழம்பூ

**“பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்**

**ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்**

**அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை” (53)**

பனை என்னும் பெயர் முன் கொடி என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுதலும் க,ச,த,பக்கள் வருமாயின் நிலைமொழி ஈற்று ஐகாரங்கெட்டு திரள் என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுதலும் ஐ போய் அம்முப் பெற்றும் ஐகாரங் கெட்டும் வருமொழி அகரம் ஆகாரமாதலும் ஆகும்.

**எ.கா:**

க    பனை + கொடி – பனங்கொடி

## வினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன? வகைகளை விளக்குக.
2. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி - விளக்கம் தருக.
3. வினாப்பெயர் விளிப்பெயர் முன் வல்லினம் மிகுதலுக்கு சான்று தருக.
4. விகாரம் என்றால் என்ன? வகைகளை விளக்குக.
5. வேற்றுமை என்றால் என்ன? வகைகளை விளக்குக.
6. உயீரிற்றுப் புணர்ச்சியை சான்றுடன் விளக்குக.
7. அகர, ஆகாரப் புணாச்சிக்கு சான்று தருக.
8. குற்றியலுகரம், முற்றியலுகரம் - விளக்கம் தருக.

# அலகு – 4

## மெய்யீற்றுப் புணரியல்

மெய்யெழுத்துக்களை இறுதியோடு உடைய நிலைமொழிகளோடு உயிர் மொழியும் மெய் முதல் மொழியுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தை எடுத்துரைக்கும் இயல்.

**மெய்யீற்றின் முன் உயிர்**

**"உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே"** (1)

நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யின் மேல் உயிர் வந்து ஒன்றுபட்டு இணங்கி நிற்பது இயல்புப் புணர்ச்சியாகும்.

**எ.கா:**

தோன்றல் + அழகன் - தோன்றலழகன்

வேல் + எறிந்தான் - வேலேறிந்தான்

**"தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்"** (2)

தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற மெய் உயிர்வரின் இரடித்து நிற்கும்.

மண் + அழகிது – மண்ணழகிது

பொன் + அணி – பொன்னணி

**மெய்யீற்றின் முன் மெய்**

**"தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்**

**துன்னு மென்று துணிநரு முளரே"** (3)

தன்னை ஒழிந்த ஞ,ண,ந,ம,ன,ர,ல,வ,ழ,ள என்னும் பத்து மெய்களின் முன்னும் யகரம் வந்தால் இகரச் சாரியையைத் தன் முன் பொருந்து மென்று அரிதிற் கொள்ளுவாருஞ்சிலருளர்.

**எ.கா:**

வேள் + யாவன் – வேளியாவன்

மண் + யானை – மண்ணியானை

**“ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்**

**ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்**

**உவ்வுறு மேவ லுறாசில சில்வழி”** **(4)**

ஞ,ண,ந,ம,ல,வ,ள,ன என்னும் எட்டு மெய்களும் இறுதியாகிய தொழிற் பெயர்களும் ஏவல்வினைகளும் யகரம் ஒழிந்த மெய்கள் வருமாயின் பெரும்பாலும் உகரச் சாரியையை பொருந்தும். சில ஏவல் வினைகள் சில விடங்களிலே அவ்வுகரச் சாரியையைப் பொருந்தாவாம்.

**எ.கா:**

உரிஞ + கடிது – உரிநுக்கடிது

உண் + சிறிது – உண்ணுச்சிறிது

பொருந் + துித – பொருநுத்தீது

திரும் + பெரிது – திருமுப்பெரிது

வெல் + ஞான்றது – வெல்லுஞான்றது

வவ் + நீண்டது – வவ்வுநீண்டது

துள் + மாண்டது – துள்ளுமாண்டது

தின் + வலிது – தின்னுவலிது

முதனிலைத் தொழிற் பெயர்களும் அல்வழியில் உகரம் பெற்றன.

உரிஞ் + கடுமை – உரிநுக்கடுமை

உண் + சிறுமை – உண்ணுச்சிறுமை

பொருந் + தீமை – பொருநுத்தீமை

திரும் + பெருமை – திருமுப் பெருமை

வெல் + ஞாற்சி – வெல்லுஞாற்சி

வவ் + நீட்சி – வவ்வு நீட்சி

துள் + மாட்சி – துள்ளுமாட்சி

தின் + வலிமை – தின்னுவலிமை

**"நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை" (5)**

நகரம் இறுதியாகிய முதல்நிலைத் தொழிற்பெயர்க்கு உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையுமாகும்.

**எ.கா:**

பொருந் + கடுமை – பொருநக்கடுமை

பொருந் +நன்மை – பொருநநன்மை

பொருந் +வன்மை – பொருநவன்மை

**ணகர னகர வீறு**

**"ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்**

**இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்**

**கனைத்து மெய் வரினு மியல்பா கும்மே" (6)**

ணகார னகாரஙகள் வேற்றுமைக்கண் வன்கணம் முறையே டகரமும் றகரமும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆம் அல்வழிக்கு அனைத்து மெய் வரினும் இயல்பு மூவின மெய்களும் வந்தாலும் இயல்பேயாகும்.

**எ.கா:**

சிறுகண் + களிறு – சிறுகட்களிறு

பொன் + தகடு – பொற்றகடு

**"குறிலிணை வில்லா ணனக்கள் வந்த**

**நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே" (7)**

தனிக் குறிலொன்றனையுஞ் சாராது ஒரு மொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகார மெய்கள் வருமொழிக்கு முதலாக வந்த நகரம் திரிந்த விடத்து கெடுதலைப் பொருந்தும்.

**எ.கா:**

தூண் + நன்று – தூணன்று

பசுமண் + நன்று – பசுமணன்று

தூண் + நன்மை – தூணன்மை

பசுமன் + நன்மை – பசுமணன்மை

ணகரம் அல்வழி, வேற்றுமை ஆகிய இரு வழியுங்கெட்டது.

அரசன் + நல்லன் – அரசனல்லன்

செம்பொன் + நன்று – சொம்பொனன்று

அரசன் + நன்னை – அரசனன்மை

செம்பொன் + நன்மை – செம்பொனன்மை

**"சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி**

**இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற**

**டவ்வா கலுமா மல்வழி யும்மே" (8)**

சாதி பற்றி வரும் பெயர்களுக்கும் திரள் பற்றி வரும் பெயர்களுக்கும் பரண், கவண் என்னும் பெயர்களுக்கும் ஈற்று ணகரம், வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் வரின் இயல்பாகும். உணவுக்குரிய எண்ணென்னும் பெயருக்கும். சாண் சாணென்னும் நீட்டலளவைப் பெயருக்கும் அல்வழிப் புணர்ச்சியிலும் திரிந்து டகரமாதலும் பொருந்தும்.

**எ.கா:**

பாண் + குடி – பாண்குடி

அமன் + குடி – அமண்குடி

பரண் + கால் – பரண்கால்

கவண் + கால் – கவண்கால்

**“ன.்.கான் கிளைப்பெய ரியல்பு ம.்.கான்**

**அடைவுமாகும் வேற்றுமைப் பொருட்கே”** **(9)**

னகரத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர் இயல்பாதலும் அகரச் சாரியை பெறுதலும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் ஆகும்.

**எ.கா:**

எயின் + குடி – எயின்குடி, எயினக்குடி

**“மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே”** **(10)**

மீன் என்னும் மொழியிறுதி னகரம் வேற்றுமைக் கண் வல்லெழுத்து வரின் றகரத்தோடு உறழ்ந்து வரும்.

**எ.கா:**

மீன் + கண் - மீற்கண்

**“தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை**

**மேவி னிறுதி யழிவும் வலிவரின்**

**ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி”** (11)

தேன் என்னுஞ் சொல் மூவின மெய்களும் இறுதி னகர மெய் இயல்பாதலும் மெல்லினம் வரின்அம்மெய் இயல்பதாலே அன்றிக் கெடுதலும் வலி வரின் வல்லினம் வரின் அம் மெய் இயல்பாதலே அன்றிக் கெட வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும். இருவலிக்கண்ணும்.

**எ.கா:**

**அல்வழி**

தேன் கடிது, தேன்ஞான்றது, தேன்யாது – மூவின மெய்களும் வர இயல்பாயின.

தேன் மொழி, தேமொழி – மெல்லினம் வர இயல்பாகவும் ஈறுகெட்டும் அமைந்தன.

தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு – வலிவர இயல்பாகியும், வல்லினமும் அதற்கு இனமும் மிக்கு வந்து முடிந்தன.

**வேற்றுமை**

தேன்கடுமை, தேன் மலிவு, தேன் யாப்பு - மூவின மெய்களும் வர இயல்பாயின

தேன்மலர், தேமலர் - மெல்லினம் வர இயல்பாகவும்,ஈறுகெட்டும் அமைந்தன.

தேன்குடம், தேக்குடம், தேங்குடம் - வல்லினம் வை இயல்பாகியும் வல்லினமும் அதற்கு இனமும் மிக்கும் வந்தன.

**“மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்**

**மருவ வலிமெலி மிகலு மாகும்”** (12)

மரப் பெயர் அல்லாத அன்னத்தைக் குறிக்கும் எகின் என்னும் சொல்இயல்பாதலும் இரு வழியும் அகரச் சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆகும்.

**எ.கா:**

எகின் கால், எகின்சிறை, எகின் தலை, எகின் புறம். வேற்றுமையில் இயல்பாயிற்று.

எகினப்புள், எகினம்புள், எகினக்கால், எகினங்கால் இரு வழியிலும் அகரம் வர வலி மெலி மிகுந்தன.

**"குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே" (13)**

குயின் என்னும் பெயரும் ஊன் என்னும் பெயரும் வேற்றுமையினிடத்தும் இயல்பாகும்.

**எ.கா:**

குயின், கடுமை, ஊண்கடுமை.

**"மின்பின் பன்கன் றொழிற்பெயர் ரனைய**

**கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்" (14)**

மின் முதலிய நான்கு சொற்களும் முதல்நிலை தொழிற் பெயர் போல யகரம் அல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பொருந்தும். இவற்றுள் கன் என்னுஞ் சொல் உகரச் சாரியையே அன்றிஅ கரச்சாரியையும் பெற்று மென்மையோடு உறழும். வல்லினம் வந்தால் வருமெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப் பெறும்.

**எ.கா:**

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, மின்னுநன்று, மின்னுவலிது.

**"தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ**

**டுறழு நின்னீ றியல்பா முறவே" (15)**

தன், என் என்னும் விகார மொழிகளுடைய இறுதியிலுள்ள னகர மெய் வல்லினம் வரிற் பொது விதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதியேலாது இயல்பாதலுமாம். நின் என்னும் விகார மொழியினது இறுதியிலுள்ள னகர மெய் வல்லினம் வரிற்றிரியாது இயல்பேயாகும்.

**எ.கா:**

தன்பகை,தற்பகை, என்பகை, எற்பகை.

**மகரவீறு**

**"மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்**

**வன்மைக் கினமாத் திரிபுவு மாகும்"** **(16)**

மகர ஈற்றுச் சொற்கள் நாற்கணமும் வர இறுதியிலுள்ள மகர மெய் கெட்டு உயிரீறு போலப் புணர்வனவும் வல்லினம் வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும்.

**எ.கா:**

மரம் + அடி – மரவடி

மரம் + வேர் – மரவேர்

மரம் + கோடு – மரக்கோடு

வேற்றுமையில் உயிரீறுபோல் முடிந்தன.

வட்டம் + ஆழி – வட்டவாழி

வட்டம் + கல் – வட்டக்கல்

பவளம் + இதழ் – பவளவிதழ்

பவளம் + வாய் – பவளவாய்

அல்வழியில் உயிரீறு போல் முடிந்தன.

மரம் + நார் – மரநார்

மரம் + நீண்டது – மரநீண்டது

மெல்லினம் வர ஈறு கெட்டு உயிரீறு போல் முடிந்தன.

நிலம் + தீ – நிலந்தீ

உண்ணும் + சோறு – உண்ணுஞ் சோறு

வல்லினம் வர இனமாகத் திரிந்து முடிந்தன.

**"வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்**

**அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள"** (17)

வேற்றுமைகண் மகர இறுதி கெட வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும் அல்வழிக்கண் உயிரும் இடையினமும்வரின் கெடாது இயல்பாதலும் உளவாம்.

**எ.கா:**

குளம் + கரை – குளக்கரை, குளங்கரை

**"நும்தம்**

**எம்நம் மீறா மவ்வரு ஞநவே"** (18)

நும் முதலிய நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகர மெய் வரும் ஞகர நகரங்களாகத் திரியும்.

**எ.கா:**

நுஞ்ஞாண், நுந்நூல், தஞ்ஞாண், தந்நூல், எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல்.

**"அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்"** (19)

அகம் என்னும் இடப்பெயர் முன் செவி, கை என்னுஞ் சினைப் பெயர்கள் வந்தால் நடுநின்ற ககர மெய்யும் அதன்மேலேறிய அகர உயிருங் கெடும்.

**எ.கா:**

அகம் + செவி – அஞ்செவி

அகம் + கை – அங்கை

**“ஈமுங்,**

**கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்**

**முதலான வேற்றுமைக் கவ்வும் பெறுமே”** **(20)**

ஈம், கம், உரும் என்னும் மூன்று சொல்லும் இருவழியும் முதல்நிலைத் தொழிற்பெயர் போல யகரம் அல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பெற்று முடியும் இவற்றுள்ளே முதற்கண் நின்ற ஈமும் கம்மும், வேற்றுமைக்கண் உகரச் சாரியை அன்றி அகரச் சாரியையும் பெறும்.

**எ.கா:**

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது.

**யகர ரகர ழகர வீறுகள்**

**“யரழ முன்னர்க் கசதப வல்வழி**

**இயல்பு மிகலு மாகும் வேற்றுமை**

**மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்”** **(21)**

யகர ரகர ழகர மெய்களின் முன் ககர சகர தகர பகரங்கள் வரின் அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும் வேற்றுமையில் மிகுதலும் இனத்தோடு உறழ்தலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதியாகும்.

**எ.கா:**

வேய்குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது - எழுவாய்

பேய், பூதம், நீர்கனல், இகழ்புகழ் - உம்மைத்தொகை

செய்கடன், தேர்பொருள், வீழ்புனல் - வினைத்தொகை

மெய்க்கீர்த்தி, கார்ப்பருவம், பூழ்ப்பறவை - பண்புத்தொகை

வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம் - உவமைத்தொகை

போய்க்கொண்டான் - யகர ஈற்று வினையெச்சம்

உண்ணியர் போவான் - ரகர ஈற்று வினையெச்சம்

நாய்க்கால், தேர்த்தலை, பூழ்ச்செலி - வேற்றுமை.

**"தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே**

**தாழுங் கோல்வந் துறுமே லற்றே"** **(22)**

தமிழ் என்னுஞ் சொல் நாற்கணமும்வரின் வேற்றுமைக்கண் அகரச் சாரியை பொருந்தவும் பெறும் தாழ் என்னுஞ் சொல் முன் கோல் என்னுஞ் சொல் வந்து பொருந்துமாயின் அவ்வகரச் சாரியை பெறும்.

**எ.கா:**

தமிழப் பிள்ளை, தமிழ நாகன், தமிழ வளவன், தமிழ வரசன்

**தாழ்க்கோல் - திறவுகோல்**

**"கீழின்முன் வன்மை விகற்பமாகும்"** **(23)**

கீழ் என்னுஞ் சொல்லின் முன் வரும் வல்லினம் ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வருவதாகிய விகற்பத்தையும் பொருந்தும்.

**எ.கா:**

கீழ்குலம், கீழ்க்குலம்; கீழ்சாதி, கீழ்ச்சாதி

**லகர ளகர வீறு**

**"லளவேற் றுமையிற் றடவு மல்வழி**

**அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி**

**மேவி னணவு மிடைவரி னியல்பும்**

**ஆகு மிருவழி யானு மென்ப"** **(24)**

லகர ளகரமாகிய இரண்டு மெய் வீறுகளும் வல்லினம் வந்தால் வேற்றுமைக் கண் முறையே றகார டகார மெய்களும் அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும். இருவழிக் கண்ணும் மெல்லினம் வந்தால் முறையே னகார ணகார மெய்களும் இடையினம் வந்தால் இயல்பாகும்.

**எ.கா:**

கல் + குறை – கற்குறை

முள் + குறை – முட்குறை வல்லினம் வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

கல் + குறிது – கல்குறி, கற்குறிது

முள் + குறிது – முள்குறி, முட்குறிது அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகால் திரிந்தும் உறழ்ந்தன.

கல் + மாண்டது – கன்மாண்டது

முள் + மாண்டது – முண்மாண்டது

மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரிந்தன.

**"குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்**

**ஆகவும் பெறூஉ மல்வழி யானே" (25)**

தனிக் குறிலின் பின் நின்ற லகர ளகர மெய்கள் அல்வழிக் கண்ணே தகரம் வருமாயின் ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும்.

**எ.கா:**

கல் + தீது – க∴றீது

முள் + தீது – மு∴டீது

**“குறில்செறி யாலள வல்வழி வந்த**

**தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்**

**வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்**

**இயல்புந் திரிபு மாவன வுளபிற”          (26)**

தனிக் குறிலொன்றனையுஞ் சாராத லகார ளகார மெய்கள் அல்வழிக்கண் வருமொழிக்கு தகரந் திரியுமிடத்து கெடுதலும் இருவழிக்கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரந் திரியுமிடத்து கெடுதலும் வலிவரின் வல்லெழுத்து வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலும் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியாதியல்பாதலும் பொருந்துவன உள.

**எ.கா:**

வேல் + தீது – வேறீது

தோன்றல் + தீயன் – தோன்றறீயன்

வாள் + தீது – வாடீது

வேள் + தீயன் – வேடீயன்

அல்வழியில் தகரம் திரிதலில் கெட்டது.

தோன்றல் + நல்லன் – தோன்றனல்லன்

வேள் + நல்லன் – வேணல்லன்

தோன்றல் + நன்மை – தோன்றனன்மை

வேள் + நன்மை – வேணன்மை

**“லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறா**

**வலிவரி னல்வழி யியல்புமா வனவுள”          (27)**

லகாரத்ஐ இறுதியாகவுடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை இறுதியாக உடைய முதல்நிலை திரிந்த தொழிற் பெயரும் இரு வழியிலும் யகரம் அல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறவாம். வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழாதியல்பாவனஞ் சில உள.

**எ.கா:**

ஆடல் சிறந்தது, ஆடற் சிறந்தது – அல்வழியில் உகரம் பெறாது முடிந்தன.

கோணன்மை, கோள்வன்மை – வேற்றுமையில் உகரம் பெறாது முடிந்தன.

நடத்தல்கடிது,நடப்பித்தலகடிது – அல்வழியில் உறழாது இயல்பாயின.

**“வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்**

**பலகைநாய் வரினம் வேற்றுமைக் கவ்வுமாம்”** **(28)**

வல் என்னும் சூதாடு கருவிப் பெயர் இருவழிகளிலும் யகரம் அல்லாத மெய்கள்வரின் முதல் நிலைத் தொழிற் பெயர் போல உகரச் சாரியை பெறும். பலகை, நாய் என்னும் இரு பெயர்வரினும் பிற பெயர்கள்வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம் வேற்றுமைக்கண் உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையும் பெறும்.

**எ.கா:**

வல்லுக்கடிது, வல்லுநன்று.

**“நெல்லுஞ் செல்லும் கொல்லுஞ் சொல்லும்**

**அல்வழி யானும் றகர மாகும்”** **(29)**

நெல் முதலிய நான்கு சொற்களின் ஈற்று லகர மெய் அல்வழியியானும் பொதுவிதியால் உறழாது அல்வழிக்கண்ணும் றகரம் ஆகும் வேற்றுமை போல றகர மெய்யாகத் திரியும்.

**எ.கா:**

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது.

**“இல்லெ னின்மைச் சொற்கை யடைய**

**வன்மை விகற்பமும் மாகா ரத்தொடு**

**வன்மை யாகலு மியல்பு மாகும்” (30)**

இன்மைப் பண்பை உணர்த்தி நிற்கும் இல் என்னுஞ் சொல்லுக்கு ஐகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும் ஆகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் மிகலும் இவ்விரு விதியும் பெறாதியல்பாதலும் பொருந்தும்.

**எ.கா:**

இல்லைப்பொருள் - இல்பொருள், ஞானம், வன்மை,அணி

**“புள்ளும் வள்ளந் தொழிற்பெயரு மானும்” (31)**

புள், வள் என்னுமிரு சொற்களும் தொழிற் பெயர் போல உகரச் சாரியையும் பெற்றுப் புணரும்.

**எ.கா:**

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, புள்ளுநன்று, வள்ளுவலிது, புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, புள்ளுநன்மை, வள்ளுவன்மை.

**வகர வீறு**

**“சுட்டு வகரமூ வினமுற முறையே**

**ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்” (32)**

அஃறிணைச் சுட்டுப் பெயர் களீற்று வகர மெய்யாகிய அவ், இவ், உவ் என்பன வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர முறையாக ஆய்தமும் வரும் மெல்லினமும் இயல்பும் ஆகும்.

**எ.கா:**

வல்லினம் வர ஆய்தமாகத் திரிந்தது.

அவ் + கடிய – அ∴கடிய

இவ் + கடிய – இ∴கடிய

உவ் + கடிய – உ∴கடிய

மெல்லினம் வர வருமெழுத்தாகத் திரிந்தது.

அவ் + ஞானம் - அஞ்ஞானம்

இவ் + ஞானம் - இஞ்ஞானம்

உவ் + ஞானம் - உஞ்ஞானம்

இடையினம் வர இயல்பாயிற்று

அவ் + யாவை – அவ்யாவை

இவ் + யாவை – இவ்யாவை

உவ் + யாவை – உவ்யாவை

தெவ்வென் மொழிப தொழிற்பெய ரற்றே

**“மவ்வரின் வ∴கான் மவ்வு மாகும” (33)**

தெவ் என்னும் பகையை உணர்த்தும் பெயர் அற்று தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்று முடியும். மகர மெய்வரின் வகர மெய் மகர மெய்யாகத் திரியவும் பெறும்.

**எ.கா:**

தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வு, வலிது, தெவ்வுக் கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை.

**வருமொழித் தகர நகரத் திரிபு**

**"னலமுன் றனவும் ணளமுன் டணவும்**

**ஆகுந் தநக்க ளாயுங் காலே"** **(34)**

ஆராயுமிடத்து னகர, லகரங்களின் முன் வருந் தகரம் றகரமாம் அவற்றின் முன் வரும் நகரம் னகரமாம். ணகர, ளகரங்களின் முன் வருந் தகரமும் டகரமாம் அவற்றின் முன்வரும் நகரம் ணகரமாம்.

**எ.கா:**

பொன் + தீது – பொன்றீது

கல் + தீது – கற்றீது

பொன் + நன்று – பொன்னன்று

கல் + நன்று – கன்னன்று

அல்வழியில் னகரமும் லகரமும் திரிந்தன.

மண் + தீது – மண்டீது

முள் + தீது – முட்டீது

மண் + நன்று – மண்ணன்று

முள் + நன்று – முண்ணன்று

அல்வழியில் ணகரமும் ளகரமும் திரிந்தன.

வேற்றுமைப் பொருட்புணர்ச்சியை உருபு புணர்ச்சியோடு மாட்டெறிதல்

**"உருபின் முடிபை யொக்குமப் பொருளினும்"** **(35)**

மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியும் முடிபுகள் அவ்வுரு பின் பொருட் புணர்ச்சிக் கண்ணும் ஒத்து முடியும்.

**புணரியலுக்குப் புறனடை**

**“இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்**

**போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்**

**கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே”** (36)

இடைச் சொற்களுக்குள்ளும் உரிச் சொற்களுள்ளும் வட சொற்களுள்ளும் உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுக் புணரியல்களிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச் சொல்லிய புணர்ச்சி இலக்கணங்கள், பொருந்தாது வேறுபட்டு வருவனவும் இலக்கணப்போலி மொழிகளும் மரூஉ மொழிகளும் இரு வகை வழக்கிலும் நடக்கும் முறைமைக்கு பொருந்துமாறு புணர்த்துதல் அறிவுடையோரெல்லார்க்கும் முறை.

**எ.கா:**

மடவை மன்ற தடவு நிலைக்கொன்றை

## வினாக்கள்

1. வேற்றுமை என்றால் என்ன?
2. ணகர னகர வீறு - சான்று தருக.
3. யகர ரகர ழகர வீறுகள் - சான்று தருக.
4. தாழ்க்கோல் - திறவுகோல் நூற்பா தந்து விளக்குக.
5. லகர ளகர வீற்றுப் புணர்ச்சியை விளக்குக.
6. அல்வழிப் புணர்ச்சியை சான்றுடன் விளக்குக.

# அலகு – 5
## உருபு புணரியல்

உயிரீறும் மெய்யீறுமான வேற்றுமையுருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

### எட்டுருபுகள் சாரும் இடவகை

**“ஒருவன னொருத்தி பலரொன்று பலவென**

**வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்**

**குருபு முறழ்தர நாற்பதா முருபே”** (1)

ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் என்று வருபெயர் ஐந்து பெயரோடும் எழுவாய் வேற்றுமையான பெயர் முதல் விளியீராக நின்ற எட்டுருபுகளையும் பெருக்க வேற்றுமையுருபுகள் நாற்பதாகும்.

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள் நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகள், நம்பீ என ஒருவ னென்னும் வாய்பாட்டுயர் திணை யாண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன. மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே ஒட்டிக்கொள்க.

### வேற்றுமை உருபுகள் வரும் வகையும் இடமும்

**“பெயர்வழித் தம்பொருள் தரவரு முருபே”** (2)

வேற்றுமை உருபுகள் தம் பொருளைக் கொடுக்க பெயர்க்குப் பின் வரும்.

**எ.கா:**

நம்பி பெற்றான், நம்பியைப் பெற்றான், நம்பியாற் பெற்றான்.

**உருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணருமாறு**

**“ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்ள**

**ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே”** (3)

நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் மெய்யுர்களை முதலும் ஈறுமாக உடைய ஐ முதலிய ஆறு உருபுகளும் இயல்போடு விகாரத் தியையும் புணர்ச்சி வகையால் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் பெரும்பாலும் ஒக்கும்.

**எ.கா:**

நம்பி +கண் + வாழ்வு – நம்பிகண்வாழ்வு

**சாரியை**

**“பதமுன் விகுதியும் பதமு முருபும்**

**புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை**

**வருதலுந் தவிர்த்தலும் விகற்பமு மாகும்”** (4)

பதத்தின் முன் இறுதிநிலையாவது பதமாவது உருபாவது புணருமிடத்து ஒரு சாரியை ஆயினும் பல சாரியைகளாயினும் வருதலும் வாரா தொழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும்.

**எ.கா:**

நடந்தனன், நடந்தன - விகுதிப் புணர்ச்சியுட் சாரியை பெற்று வந்தன

நடந்தான், நடந்த - விகுதிப் புணர்ச்சியுள் சாரியை பெறாது வந்தன.

**பொதுச் சாரியைகள்**

**“அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்**

**தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன**

**இன்ன பிறவும் பொதுச் சாரியையே”** (5)

அன் முதல் னகர மெய் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும் பிறவும் பதம் உருபென்னும் மூன்று புணர்ச்சிகளிலுந் தனி மொழிகளிலும் வருதலினாலே பொதுச் சாரியையாகும்.

**எ.கா:**

| | | | |
|---|---|---|---|
| ஒன்றன் கூட்டம் | - அன் | ஒருபாற்கு | - ஆன் |
| வண்டின் கால் | - இன் | தொடையல் | - அல் |
| பலவற்றை | - அற்று | பதிற்றுப்பத்து | - இற்று |
| மரத்திலை | - அத்து | மன்றம் | - அம் |
| எல்லார் தம்மையும் | - தம் | எல்லா நம்மையும் | - நம் |

**உருபு புணர்ச்சிக்குச் சிறப்பு விதி**

**"எல்லா மென்ப திழிதிணை யாயின்**

**அற்றோ டுருபின் மேலும் முறுமே**

**அன்றே னம்மிடை யடைந்தற் றாகும்" (6)**

எல்லா மென்னும் பொதுப்பெயர் இழிதிணை ஆயின அஃறிணையில் வரும் போது அற்றுச் சாரியையோடு உருபின் மேல் முற்றும்மையும் பெறும். அஃறிணை அன்றி உயர்திணையில் வரும் போது இடையிலே நம்முச் சாரியை அடைந்து உருபின் மேல் முற்றும்மையும் பெறும்.

**எ.கா:**

எல்லாவற்றையும், எல்லாநம்மையும்.

**"எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை**

**தள்ளி நிரலே தம் நும் சாரப்**

**புல்லு முருபின் பின்ன ரும்மே" (7)**

எல்லாரும் எல்லீரும் என்னும் இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளை நிக்கி தம்முச் சாரியையும் நும்முச் சாரியையும் அவை இருந்த இடங்களிலே பொருந்த

உம் அவற்றினாலே நீங்கிய முற்றும்மைகள் உருபின் பின்னர்ப் புல்லும் உருபுகளின் பின்னே வந்து பொருந்தும்.

**எ.கா:**

எல்லார் தம்மையும், எல்லாரையும்

எல்லீர் நும்மையும், எல்லீரையும்.

**"தான் தாம் நாம் முதல் குறுகும் யான்யாம்**

**நீ நீர் என் எம் நின்நு மாம்பிற**

**குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல"** **(8)**

தான், தாம், நாம் என்னும் மூன்று பெயர்களும் நெடு முதல் குறுகும்.தன், தம், நம் எனவரும். யான் யாம் நீ நீர் என்னும் பெயர்களும் என், எம், நின், நும் ஈம் எனத் திரியும். நடுவே அகரச் சாரியை வரும். ஆறாம் வேற்றுமை உருபு உயிர்கள்வரினும் மொழிகளினிறுதியிலுள்ள தனிக்குறில் முன்னொற்றுக்கள் இரட்டவாம்.

**எ.கா:**

தான் + ஐ – தன்னை

தாம் + ஐ – தம்மை

நாம் + ஐ – நம்மை

**"ஆமா கோனவ் வணையவும் பெறுமே"** **(9)**

ஆ என்னும் பசுவின் பெயரும் மா என்னும் விலங்கின் பொதுப் பெயரும் கோ என்னும் இறைவனை உணர்த்தி நிற்கும் பெயரும் உருபுகள் புணருமிடத்து னகரச் சாரியை பெறும்.

**எ.கா:**

ஆனை, ஆவை, மானை, மாவை, கோவை, கோவை.

**"ஒன்று முதலெட் டீறா மெண்ணூர்**

**பத்தின்முன் னான்வரிற் பவ்வொற் றொழியமேல்**

**எல்லா மோடு மொன்பது மிற்றே"** (10)

ஒன்று முதல் எட்டீறாகிய எண்களோடு புணர்ந்த பத்தென்னும் எண் முன் ஆன் சாரியை வரின் அப்பத் தென்னும் எண்ணினது பகர மெய் ஒன்றுமே நிற்க அதன் மேலே நின்ற எல்லா எழுத்துக்களுங் கெடும். ஒன்பதென்னும் எண் முன்னும் இவ்வாறாம். உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகர மெய் நிற்க மேலே நின்ற எல்லா எழுத்துங்கெடும்.

**எ.கா:**

ஒரு பானை, ஒருபதை, ஒருப∴தை

ஒன்பானை, ஒன்பதை, ஒன்ப∴தை

**"வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே"** (11)

அவ் இவ் உவ் என்னும் வகர மெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும் உருபுகள் புணருமிட்து அற்றுச் சாரியை பொருந்துதல் முறையாம்.

**எ.கா:**

அவற்றை, இவற்றை, உவற்றை.

**"சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே"** (12)

சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம் அன் சாரியை வரிற் கெடும்.

**எ.கா:**

அ∴து + ஐ – அதனை, அ∴தை

இ∴து + ஐ – இதனை, இ∴தை

உ∴து + ஐ – உதனை, உ∴தை

**"அத்தி னகரம் அகரமுனை யில்லை" (13)**

அத்துச் சாரியையினது அகரவுயிர் முன்வந்தால் கெடும்.

**எ.கா:**

மக + அத்து + கை – மகத்துக்கை

மர + அத்து + கை – மரத்துக்கை

**புறனடை**

**சாரியைக்குப் புறனடை**

**"இதற்கிது சாரியை யெனினள வின்மையின்**
**விகுதியும் பதமு முருபும் பகுத்தடை**
**நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்**
**ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே" (14)**

விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை என்று அளவு செய்து தனித்தனி சொல்லப் புகுந்தால் அளவு படாமையால் விகுதிப் புணர்ச்சியையும் பதப்புணர்ச்சியையும் உருபுப் புணர்ச்சியையுங் கண்ட விடத்துப் பகுத்து நடுவே நின்ற ஏகாரம் அகரம் முதலிய எழுத்துச் சாரியையினையும் அன், ஆன் முதலிய பதச்சாரியையினையும் இவ்விரண்டு சாரியையுற் தோன்றாத இயல்பினையும் தெரிய அறிவித்தல் பெரியோரது கடமையாகும்.

**நான்கு புணர்ச்சிக்கும் புறனடை**

**"விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்**
**உரைத் விதியினோர்ந் தொப்பன கொளலே" (15)**

விகுதிமு் பதமுஞ் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சியினிடத்தும் உரைத்த விதியின் ஓர்ந்து எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியே அதற்குக் கொள்க.

**வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை**

**“இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்**
**உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்**
**விரவுப் பெயரின் விரிந்து நின்றும்**
**அன்ன பிறவு மாகுமை யுருபே”** (16)

வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொது விதிப்படி தானும் ஒருங்கு முடிதலே அன்றி அப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும் உயர்திணைப் பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும் பொதுப் பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும் அவை போல்வன பிற வேறுபாடுகளாகியும் வரும்.

**“புள்ளியு முயிரு மாயிறு சொன் முன்**
**றம்மி னாகிய தொழின் மொழி வரினே**
**வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்”** (17)

ஒற்றும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின் முன் கருத்தாவாகிய நிலை மொழிப பொருள்களாலாகிய தொழிற் சொல் வந்தால் அவ்விடத்து வரும் வல்லினம் வேற்றுமைப் பொது முடிபு ஏலாது உறழ்ச்சியும் இயல்பும் ஆகும்.

**எ.கா:**

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்

**எழுத்ததிகாரத்துக்குப் புறனடை**

**“இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்**
**விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்**
**வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே”** (18)

இதற்கு இது முடிபென்பது இவ்வெழுத்ததிகாரத்துள் விதிக்கத் தகுந்தனவற்றை எல்லாங் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப் புகின் அதற்கு ஓரளவு இல்லாமையால் வகுத்து விதி உரைத்துக் கொள்க.

## வினாக்கள்

1. வேற்றுமை உருபுக்கள் என்றால் என்ன? சான்று தருக.
2. நிலைமொழி, வருமொழி - விளக்கம் தருக.
3. உருபுப் புணர்ச்சியை சான்றுடன் விளக்குக.
4. சாரியை என்றால் என்ன? விளக்கம் தருக.
5. உருபு புணரியல் தருக் செய்திகளை தொகுத்துரைக்க.

**முனைவர்.த.க.ஜாஸ்மின் சுதா,**

உதவிப்பேராசிரியர்,

தமிழியல்துறை,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி -12.